

விவிலியமும் விஞ்ஞானமும்

இன்றைய விஞ்ஞானத்தின் பல கண்டுபிடிப்புகளுக்கு
அடிப்படை விவிலியமே என ஆதாரங்களுடன் ஓர் நிரூபணம்

எஸ். தாயப்பன்





"கர்த்தாவே, வானங்கள் உம்முடைய
அதிசயங்களைத் துதிக்கும்." - சங்கீதம் 89:5

விஞ்ஞானமும் விவிலியமும்

(இன்றைய விஞ்ஞானத்திற்கு அடிப்படை விவிலியமே என ஆதாரபூர்வமாய் நிரூபிக்கும் நூல்)

எஸ். தாயப்பன்

"வான மண்டலங்கள் அவரது கைத்திறனை எடுத்துரைக்கும்" – சங் 18 : 1

விஞ்ஞானமும் விவிலியமும்

முதற்பதிப்பு - டிசம்பர் 2012 - 5000 பிரதிகள்

இந்த நூல்கள் மற்றும் VCD கிடைக்கும் முகவரி :

எஸ். தாயப்பன்

12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ - 1
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி : 044 - 22234526
e-mail : sakthiprabha@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள் :

ஒவ்வொரு நூலுக்கும் VCD க்கும் நன்கொடை ரூ. 10 தபால் செலவு ரூ 1/- அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் டெலிபோன், செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

VCD அனுப்ப தபால் செலவு மட்டும்

1 முதல் 15 VCD அனுப்ப ரூ 20/-

16 முதல் 25 வரை VCD அனுப்ப ரூ. 35/-

100 VCDக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் KPN Parcel Service மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர :

நேரில் நூல்களை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து M சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். இடது புறம் உள்ள சிட்லபாக்கம் மெயின்ரோட்டில் ½ கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலது புறம் K.K. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி. நாயுடு தெருவில், இடது புறத்தில் இரண்டாவது வீடு.

GOOD SAMARITAN

Good Samaritan

Trust Regn. No 379 / 1994

47, Alagar Nagar 5th Street, K.Pudur, Madurai - 625 007, Tamil Nadu.

Tel : (R) +91 452 2533160 / 2526097, (O) +91 452 2568060 / 2563674 Mob +91 9443029717
e-mail : jbchandran@hotmail.com; jbchandran@gmail.com

Pastor S. Joseph Balachandran
Managing Trustee, Senior Pastor & Overseer

மதிப்புரை

சுவிசேஷகர் **S. தாயப்பன்** எழுதி வெளியிடுகிற **"விஞ்ஞானமும் விவிலியமும்"** என்ற இப் புத்தகத்திற்கு மதிப்புரை எழுதுவரை பாக்கியமாகக் கருதுகிறேன். சில ஆண்டுகளாக அவரோடு பழகி, அவரை ஊழியங்களில் உபயோகப்படுத்தி, இவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம், உண்மையும் உத்தமமுள்ள தேவ ஊழியக்காரன் என்று கண்டறிந்து, தேவனைத் துதிக்கிறேன். விசேஷமாக 10 ரூபாய் நன்கொடைக்குப் புத்தகங்களையும் VCDகளையும் சுவிசேஷ பாரத்தோடு, பண ஆசையில்லாமல் விநியோகம் செய்வதை இதுவரை எவரையும் நான் பார்த்ததில்லை. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

இப்புத்தகத்தின் நகலை நான் படித்துப் பார்த்தபோது, மெய்யாகவே இப்புத்தகம் ஆத்தும ஆதாயம் செய்கிற அனைவருக்கும் உற்சாகமூட்டுகிற ஒரு கருவியாகப் பயன்படும் என்பதில் எவ்வளவேனும் சந்தேகமில்லை. மிகுந்த கவனத்தோடு, நன்கு ஆராய்ச்சி செய்து, ஏராளமான தகவல்களுடன் இப்புத்தகம் வெளிவருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இப்புத்தகத்தில் சொர்கம், நரகம் இருப்பது உண்மை, டார்வின் குரங்குக் கொள்கை, நோவா கட்டிய பேழை, பெட்ரோல் நிலக்கரி எப்படி உருவானது போன்ற சத்தியங்கள் அனைவருடைய ஆவிக்குரிய கண்களைத் தெளிவாக்கும் என நிச்சயமாக நம்புகிறேன்.

தேவன் தாமே தம்முடைய ஊழியக்காரன் சுவி. **S. தாயப்பன்** இன்னும் பல நூறு புத்தகங்களை எழுதி வெளியிட அபிஷேகித்து, பாதுகாத்து, பயன்படுத்துவாராக என வாழ்த்துகிறேன்.

கிறிஸ்துவின் சேவையில்

JosephBalachandran

(Pr. S. ஜோசப் பாலச்சந்திரன்)
அல்லேலூயா டவர், நல்ல சமாரியன் ஆலயம்
47, அழகர் நகர், புதூர், மதுரை - 7.
போன் 0452 - 2533160, 2568060

மதுரை
19.12.2012

பொருளடக்கம்

ஈடு இணையற்ற பரிசுத்த வேதாகமம் 9

இறைவனே முதலில் எழுதித் தந்தார் 9

எழுத்தறிவித்த இறைவன் 10

படிக்கச் சொல்லிக் கொடுத்ததும் அந்தப் பரமன்தானே.................... 10

பேசச்சொல்லிக் கொடுத்ததும் பெயரில்லாத அந்த பெரிய ஆண்டவரே 11

வேத புத்தகமும், ஜீவ புத்தகமும் 12

சொர்க்கம், நரகம் இருப்பது உண்மை.................................... 12

ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள் பூமியில் யாரை
வணங்குவார்கள்? 15

அற்புதங்களைச் செய்கிறவர் கர்த்தர். அவருக்கே மகிமை 16

விஞ்ஞானம் உண்மையா? அல்லது பரிசுத்த வேதாகமம் உண்மையா? 17

விஞ்ஞானிகளே வியந்து போற்றும் விவிலியம் 18

மனிதன் குரங்கிலிருந்து வந்தானா? 19

டார்வினின் குரங்குக் கொள்கை 20

மனிதனும் மிருகமும் 22

டார்வின் வாழ்வின் முடிவு 24

விஞ்ஞானம் சொல்வதற்கு முன்பே விவிலியம் கூறிவிட்டது........... 24

மனிதன் உண்டாகி எவ்வளவு ஆண்டுகள் ஆகியிருக்கும்? 26

உலகம் உண்டாகி எவ்வளவு வருடங்கள்தான் ஆகிறது? 27

நயாகரா நீர்வீழ்ச்சி தரும் உண்மை 29

நட்சத்திர ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் கண்ட உண்மை................. 29

சந்திரனில் நடந்த ஆராய்ச்சியும் வேதாகமத்தின் கூற்றை
உறுதி செய்கிறது 30

உலகம் உண்டானது அந்த உன்னத தேவனால் 31

பூமியைச் சுற்றியுள்ள காந்த மண்டலம் சொல்லும் உண்மை என்ன? ... 32

வேதவசனமே சகல விதமான படைப்புக்களுக்கும் ஆதாரமாய் இருக்கிறது 33

ஒளியாக இருக்கிற சக்தி எப்படி உருவாகியது? 35

உயர்விலிருந்து தாழ்வா? தாழ்விலிருந்து உயர்வா?........................ 36

விஞ்ஞானிகளால் ஏன் நட்சத்திரங்களை எண்ணிவிட முடியவில்லை? 37

மனிதன் சந்திரனில் வாழமுடியுமா?... 39

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எதற்காகப் படைக்கப்பட்டன? 41

உண்மையிலேயே நோவா காலத்தில் உலகமெங்கும் மழை
பெய்து பெரு வெள்ளம் வந்ததா? 44

அன்றைய உலகின் அழிவுக்கு அன்றைய மக்களின் அக்கிரமமே காரணம் 45

நோவா கட்டிய பேழை (கப்பல்) 46

பேழை எவ்வளவு நாட்கள் தண்ணீரில் மிதந்தது?............................. 49

நோவாவின் காலத்தில் எவ்வளவு ஜனங்கள் இந்த பூமியில் வாழ்ந்தார்கள்? 50

அன்றைய மக்களுக்கு மனந்திரும்பும் நற்செய்தி சொல்லப்பட்டதா? 51

உலகம் வெள்ளத்தால் அழியும் அளவுக்கு தண்ணீர் எங்கிருந்து வந்தது? 52

பூமியை சுற்றி நீர்த்திரை இருந்ததா ?.. 54

வானவில் எப்படி தோன்றியது ?.. 55

பூமி சாய்வாக சுற்றுவதின் காரணம் என்ன ? 56

நோவா காலத்தில் பெய்த மழைத் தண்ணீர் இப்போது எங்கே?............ 56

பாறைப்படிவங்கள் கூறும் உண்மை 57

எவரெஸ்ட் மலையில் மீன்கள் எப்படி வந்தது ? 58

நோவாவின் பேழை இப்போது எங்கே இருக்கிறது ?.......................... 59

பெட்ரோல் எப்படி உருவானது ? 61

நிலக்கரி உலகமெங்கும் எப்படிக் கிடைக்கிறது ?............................. 64

இந்த உலகம் அக்கினியினால் அழியும்.. 66

ஆசிரியர் எழுதி வெளியிட்டுள்ள மற்ற நூல்கள்

எண்	நூலின் பெயர்	புத்தக குறியீடு	மொழி	பிரதிகள் விற்பனையில்
-	புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க உதவும் நூல்கள்			
1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	T	தமிழ்	2,75,000
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	K	கன்னடம்	30,000
3	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	M	மலையாளம்	30,000
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	TL	தெலுங்கு	10,000
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	H	இந்தி	10,000
6.	My Cry & Joyful New Life	E	ஆங்கிலம்	40,000
7.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	S	தமிழ்	95,000
8.	உண்மையான கடவுள் யார்?	RG	தமழ்	10,000
9.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும்	SVC	தமிழ்	20,000
10.	பாவத்தின் சம்பளம் நரகம்	P	தமிழ்	80,000
11.	இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை.ஏன்?	JN	தமிழ்	40,000
12.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	RV	தமிழ்	20,000
13.	விவிலியமும் விஞ்ஞானமும் (அச்சில் உள்ளது)	VV	தமிழ்	5,000
14.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து	CIV	தமிழ்	10,000
15.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி (Dr. கிறிஸ்டோபர்)	TG	தமிழ்	5,000
16.	நீங்களே எனக்கு சாட்சிகள்	YW	தமிழ்	20,000
17.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் பாகம் 1	I PRO		10,000
18.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் பாகம் 2	II PRO	தமிழ்	10,000
19.	அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு	JH	தமிழ்	5,000
20.	தெய்வீக சுகம் உண்டா? (எபி. சுந்தர்ராஜ்)	EBE	தமிழ்	10,000
21.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (சாட்சி)	V	தமிழ்	2,70,000
22.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும்	KV	கன்னடம்	40,000
23.	VCDஎன் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும்	HV	இந்தி	15,000
24.	VCD முக்திக்கு வழி கிறிஸ்தவமே	MVC	தமிழ்	15,000
25.	ACD சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும் - கதாகாலட்சேபம்	KAC	தமிழ்	10,000
26.	கிறிஸ்தவர்களை பலப்படுத்தும் நூல்கள் VCDs		தமிழ்	
27.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு பாகம் 1	CAT I	தமிழ்	10,000
28.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு பாகம் 2	CAT II	தமிழ்	10,000
29.	கிறிஸ்த்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில்	QA	தமிழ்	30,000
30.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு	AC	தமிழ்	10,000
31.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	NG	தமிழ்	10,000
32.	என் ஊழியக்காரனே?	OM	தமிழ்	15,000
33.	இந்தியா ஒரு கிறிஸ்தவநாடு (சுந்தர் இயேசு வடியான)	ICN	தமிழ்	
34.	இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (சகோதரி மரியா)	JSC		10,000
35.	எழுந்து கட்டுவோம்	RB	தமிழ்	20,000
36.	இயேசு உன்னோடு பேசுகிறார்	JS	தமிழ்	30,000

என்னுரை

பரிசுத்த வேதாகமத்திற்கு ஈடு இணை இந்த உலகத்தில் எதுவுமே கிடையாது என்பதை அறிந்த பிறகு இதை அத்தனை பேரும் புரிந்து கொண்டிருக்கவில்லையே, கிறிஸ்தவர்களே சத்திய வேதத்தின் மகிமையை இன்னும் பரிபூரணமாக உணராமல் இருக்கின்றனரே என்ற ஆதங்கத்தில்தான் 'அரிய வேதம், அறிய வேண்டிய வேதம்' என்ற நூலை எழுதும்படி கர்த்தர் கிருபை தந்தார். பல சரித்திர வரலாற்று நிகழ்வுகள் எல்லாமே பைபிளில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொல்லப் பட்டுள்ளபடியே அப்படியே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியிருக்கிறது என்பதை 'நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள்' என்று இரண்டு பகுதிகளாக எழுதி வெளியிடவும் கர்த்தர் கருணை புரிந்தார்.

இந்த நூல்களை எழுதுவதற்காக பரிசுத்த வேதாகமத்தையும் மற்றும் பல நூல்களையும் நான் நன்கு ஆழமாகப் படிக்கும்போதுதான் மனிதன் வாழவேண்டிய வாழ்வியலை மாத்திரம் பைபிள் சொல்லவில்லை. விண்ணியல், மண்ணியல், உயிரியல், உடலியல், விஞ்ஞானம், மெய்ஞானம், பொறியியல் என அனைத்து இயல்களுக்கும் ஆதாரமாக இருப்பது மட்டுமல்ல, இன்றைய உலகின் விஞ்ஞானத்திற்கு அடிப்படையாகவும், இன்றைய அநேக கண்டுபிடிப்புகளுக்கு மூல ஆதாரமாக இருப்பதுவும் விவிலியமே என்று உலகிற்கு நிரூபிக்கத்தக்க விதமாக பல ஆதாரங்களையும் கண்டு அப்படியே ஆச்சரியத்தில் ஆடிப்போனேன். அதுவும் குறிப்பாக சகோ. குரூஸ் திவாகரன் எழுதிய பரிசுத்த வேதாகமும் விஞ்ஞானமும் என்கிற நூலையும் மற்றும் சில நூல்களையும் படித்த போது இவைகளை எல்லாம் அனைவரும் அறிந்து கொள்ளும்படியாக இவைகளை அனைவருக்கும் கூறவேண்டுமே என்கிற தாகம் எனக்கு. அதன் பிரதிபலிப்பே இந்த நூல்.

பலவிதமான உலகக் காரியங்களை ஆராய்ந்து பட்டங்கள் பலவற்றை பெறுவதைக் காட்டிலும், இந்தப் பிரபஞ்சத்தையும் நம்மையும், சகல

ஜீவராசிகளையும் படைத்த அந்த சர்வ வல்ல சர்வேஷ்வரரின் வார்த்தைகளைக் கொண்டுள்ள பரிசுத்த வேதாகமத்தை ஆராய்ந்து அறிந்தால் நாம் நித்ய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியும். 'மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்' என மத் 4:4 கூறுகிறதே. நாம் உலக ஞானத்தைவிட பரலோக ஞானத்தை அடைய வேண்டியது மிக மிக அவசியம்.

இந்த விஞ்ஞான யுகத்திலே மனிதன் தன்னையும், தன்னைப் படைத்தவரையும் மறந்துவிட்டு, தன்னுடைய இந்த விஞ்ஞான அறிவினாலே எதையும் சாதித்துவிட முடியும் என மமதை கொண்டுள்ளான். அவன் நம்பும் இந்த விஞ்ஞானத்திற்கு அடிப்படையே பரிசுத்த வேதாகமம்தான். பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள அரிய பல விஞ்ஞான உண்மைகளை தற்கால விஞ்ஞானிகள் பல ஆயிரம் கோடி பணம் செலவழித்து, பல்லாண்டு உழைப்பிற்குப் பிறகு கண்டு பிடித்துள்ளவைகள் எல்லாம் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக சத்தியத் திருமறையில் எழுதப்பட்டுள்ளது என நிரூபிக்கவே இந்த நூல்.

இந்த நூலை நீங்களும் வாங்கிப் படித்து, மற்றவர்களுக்கும் வாங்கிக் கொடுங்கள். குறிப்பாக நம் வீட்டிலுள்ள குழந்தைகளுக்கும், சண்டே கிளாஸ் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுங்கள். கர்த்தரின் அளவற்ற கிருபை உங்களோடு இருப்பதாக.

இறைப்பணியில்

சகோ. தாயப்பன்

சென்னை - 73
01.11.2012

விஞ்ஞானமும் விவிலியமும்

ஈடு இணையற்ற பரிசுத்த வேதாகமம்

பரிசுத்த வேதாகமம் சகல விதத்திலும் ஈடு இணையற்று, உலகிலேயே அதிகமாக பிரிண்ட் ஆகிற, அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட, அதிகமான பேர்களால் அனுதினமும் வாசிக்கப்படக் கூடிய, அனைத்து வயதினராலும், தத்துவ மேதைகளிலிருந்து, விஞ்ஞானிகள், தேசத் தலைவர்கள், அறிவு ஜீவிகள் என அனைத்துத் தரத்து மக்களாலும் இது மிகவும் விரும்பிப் படிக்கக்கூடிய நூலாக இருப்பதற்கு காரணம் இது இறைவனால் மனுக்குலத்திற்கு அளிக்கப்பட்ட ஒரு அன்புப் பரிசு என்பதாலேயே. பரிசுத்த வேதாகமத்தை எழுதிய 40 ஆசிரியர்களில் சிலரைத் தவிர, மற்ற அனைவருமே படிக்காத பாமர மக்களான மீன் பிடிக்கிறவர், ஆடு மேய்க்கிறவர், பான பத்திரர் போன்றவர்களைக் கொண்டே ஆண்டவர் சத்திய வேதத்தை எழுதவைத்தார். 'வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டு இருக்கிறது' என II தீமோ 3:16 கூறுகிறது. அவைகள் 'பரிசுத்த எழுத்துக்கள்' என்று II தீமோ 3:15 சொல்கிறது.

பாவியாய்ப் போன மனிதன் இந்த பரிசுத்த எழுத்துக்களை தானாகவே எழுத முடியாது. பரிசுத்த வேதாகம இறை வாக்குகள் எல்லாம் ஒருபோதும் மனிதன் தன் சுய அறிவினால், சுய விருப்பத்தினால் எழுதவே முடியாது, பேசியிருக்கவும் முடியாது. இதை திருமறை தெளிவாகக் கூறுகிறது '(வேதத்திலுள்ள) தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்' என வேதம் தெளிவாக II பேதுரு 1:21ல் கூறுகிறது.

இறைவனே முதலில் எழுதித் தந்தார்

நம்மோட குழந்தைகளை நாம Pre-KG யில சேர்த்த உடனே அவர்களுக்கு முதல்ல எப்படி எழுத கத்துத்தர்றாங்க? ஒரு சிலேட்டில அல்லது பிளாக்போர்டுல டீச்சர், 'அ, ஆ, இ, ஈ' அல்லது "A, B, C, D' என

எழுதுவாங்க. குழந்தைங்க அந்த எழுத்து மேலேயே பலதடவை எழுதுவாங்க. அதுபோலத்தான் நம்மோட இறைவனும் முதல்ல ஒரு பலகையில எழுதிக்காட்ட அதைப் பார்த்துத்தான் தேவ மனுஷங்க எழுத ஆரம்பிச்சாங்க. அதுவே வேதப்புத்தகமாக ஆனது. 'அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாய் இருந்தது' என யாத் 32:16 கூறுகிறதே.

எழுத்தறிவித்த இறைவன்

எழுத்தறிவித்தவன் இறைவன் என்று உலகம் கூறுகிறது. ஆனா அந்த எழுத்தை எழுத, படிக்க, பேச மனுஷனுக்கு அந்த ஞானேஷ்வரனே போதித்தார்ங்கிறதை உறுதிபட, அழுத்தமா சொல்ற ஒரு புத்தகம் இருக்குன்னா, அது பரிசுத்த திருமறையாகத்தான் இருக்க முடியும். அந்த சர்வேஷ்வரனே சொல்லச்சொல்ல, அந்த ஒவ்வொரு வார்த்தைகளையும் தேவ மனிதர்கள் எழுதினார்கள் என்பதை யாத் 34 : 27ல் 'இந்த வார்த்தைகளை நீ எழுது. இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும், இஸ்ரவேலரோடும் உடன்படிக்கை பண்ணினேன்' என தேவ மனுஷன் மோசேயோட ஆண்டவர் திருவுளம் பற்றினாரே. அது மத்திரமல்ல, 'நாம் உனக்குச் சொன்ன எல்லா வார்த்தைகளையும், ஒரு புத்தகத்தில் எழுதிக் கொள்' என்றும் சொன்னாரே. எரேமியா 30 : 2 ல வெளி 1 : 19ல 'நீ கண்டவை களையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பிறகு சம்பவிப்பவைகளையும் எழுது' என்றும் ஒரு ஆபீஸ்ல ஒரு மேலதிகாரி எப்படி தன் P.A. வைக் கூப்பிட்டு, அவர் சொல்லச் சொல்ல, அதை வேகமாக எழுதுவார்களோ, அப்படி ஆண்டவர் சொல்லச் சொல்ல தேவ மனிதர்களும் எழுதியிருக்கிறார்கள்.

படிக்கச் சொல்லிக் கொடுத்ததும் அந்தப் பரமன்தானே

மனுஷனுக்கு முதல்ல எழுத்துக்களை படிக்கச் சொல்லிக் கொடுத்ததும் ஆண்டவர்தான்னு பரிசுத்த வேதாகமத்திலிருந்து தெரிகிறது. தானியேல் தீர்க்க தரிசன புத்தகத்தில பல்தசார் எனும் அரசன் தேவனை மறந்து பொய்யான தேவர்களை நம்பி துன்மார்க்கத்தில் வாழ்ந்தபோது, அரண்மனை சுவற்றிலே ஒரு கை வந்து எழுதியது. அந்த எழுத்துக்களை படிக்கவும், புரிந்து கொள்ளவும்

அவனால் முடியவில்லை. 'மெனே மெனே தெக்கேல், உப்பாச்சின்' என்று ஆண்டவரால் எழுதப்பட்ட வார்த்தைகளை ஆண்டவரின் ஆவியால் நடத்தப்பட்ட தானியேலைத் தவிர வேறு யாராலும் படிக்கவும், புரிந்து கொள்ளவும் முடியவில்லை. தானியேல் அதனைப் படித்து அதன் விளக்கத்தை சொன்னான் என்று தானி 5 : 25 – 28 கூறுகிறது.

பரிசுத்த வேதாகமத்தையும், அதன் ஆழமான சத்தியங்களையும் நாம் படித்து நன்கு புரிந்து கொள்ள வேண்டுமானால், முதலில் தேவனை நோக்கி நாம் மன்றாட வேண்டும். 'ஆண்டவரே, உமது வேத வசனங்களின் இரகசியங்களையும், மறை பொருளையும் புரிந்து கொள்ள எனக்கு ஞானத்தைத் தாரும்'னு நாம் கெஞ்சிக் கேக்கும்போது அவர் தம் ஆவியானவரால் நம்மை நிரப்புவார்.

பேசச்சொல்லிக் கொடுத்ததும் பெயரில்லாத அந்த பெரிய ஆண்டவரே

மோசேயை தேவன் தமது ஊழியத்துக்காக அழைத்தபோது 'ஆண்டவரே, நான் வாக்குவல்லவன் அல்ல. நான் திக்கு வாயும், மந்த நாவும் உள்ளவன்' என்று மோசே சொன்னார். அப்போது தேவன் 'நான் உன்னோடு இருந்து, நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன்' என்றாரே – (யாத் 4 : 10 – 12). அதே போல எரேமியாவிடமும் கர்த்தர் தமது கரத்தை நீட்டி அவரின் வாயைத் தொட்டு 'இதோ என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்' என்று எரேமியா 1 : 9ல செய்தாரே. எழுத, படிக்க, பேச ஞானமுள்ளவர்களாக நாம் மட்டுமல்ல, நம்மோட பிள்ளைகளும் அப்படி ஞானவான்களா ஆகணும்னா, மனித இனம் எழுத, படிக்க, பேசுகின்ற ஆற்றலைப் படைத்த அந்தப் பரமேஷ்வரரிடம் நாம் கேட்க வேண்டும். கர்த்தர் கொடுத்த இந்த நாவை கெட்ட, அசிங்கமான வார்த்தைகளையோ, அடுத்தவர்களைப் பத்தி குறை சொல்வதற்கோ, பொய் சொல்வதற்கோ, மனம் புண்படும்படியாக பேசுவதற்கோ, அன்பில்லாத வார்த்தைகளை பேசுவதற்கோ பயன்படுத்தக்கூடாது. நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளையும் ஆண்டவர் உன்னிப்பாக கவனிக்கிறாரே. 'உன் வாயின் வார்த்தைகளினாலே நீ நீதிமான் என்றும், குற்றவாளி என்றும் தீர்க்கப்படுவாய்' என்று ஆண்டவர் சொல்லி இருக்காரே!

வேத புத்தகமும், ஜீவ புத்தகமும்

இறைவன் இரண்டு புத்தகங்களை வைத்துள்ளார். ஒன்று வேதப் புத்தகம். மற்றொன்று ஜீவப் புத்தகம். கர்த்தர் மனுஷனைக் கொண்டு எழுதிய புத்தகம் வேதப் புத்தகம். தேவன் தாமே தானே பரலோகத்தில் நம்மைக் குறித்து எழுதி வைத்திருக்கின்ற புத்தகம் ஜீவப் புத்தகம். வேதப் புத்தகத்தில் மனிதர்களாகிய நாம் கடைப்பிடிக்க வேண்டிய நீதி நெறிகள், வழிமுறைகள் எழுதப்பட்டுள்ளன. வேதப் புத்தகத்தில் எழுதியுள்ளபடி நீதியோடு, நேர்மையோடு, உண்மையோடு, உத்தமத்தோடு நடக்கின்றவர்களின் பெயர்களை, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களின் பெயர்கள் ஜீவப் புத்தகத்தில் எழுதப்பட்டு இருக்கும்.

ஜீவப் புத்தகத்தில் எவருடைய பெயர்கள் எழுதப்பட்டு இருக்கிறதோ, அவர்கள் மட்டுமே பரலோகத்தில், மோட்சத்தில் பிரவேசிப்பார்கள். வேதப் புத்தகத்தை அனுதினமும் வாசித்து, அதன்படி நடக்காதோர் பெயர் ஜீவபுத்தகத்தில் இடம் பெறாது. பாவம் செய்தவர்களின் பெயர்களும் அதில் இடம் பெற்றிருக்காது. 'எனக்கு விரோதமாக பாவம் செய்தவன் எவனோ அவனுடைய பெயரை என் புத்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன்'னு யாத் 32 : 33ல் ஆண்டவர் சொல்லி இருக்காரே. ஜீவப் புத்தகத்தில் பெயர் இல்லாதிருப்பவர்கள் பரலோகம் போக முடியாது. அவர்கள் போக வேண்டிய இடம் எரிநரகம், அக்கினிக் கடல், கந்தகக் கடல், அக்கினி சூளை என்று அழைக்கப் படுகின்ற நரகம். வேதம் தெளிவாகக் கூறுகிறது, சொர்க்கம், நரகம் என்பது வெறும் கற்பனைக் கதை அல்ல.

சொர்க்கம், நரகம் இருப்பது உண்மை

சொர்க்கம், நரகம் இருப்பது உண்மை என பரிசுத்த வேதாகமம் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறது. உண்மையில் நரகம் என்பது பாவம் செய்யும் மனிதர்களுக்காக உண்டாக்கப்பட்ட ஒன்று அல்ல. அது கர்த்தருடைய பார்வையில் விழுந்துபோன லூசிபர் என்கிற சாத்தானுக்கும், அவனுடைய சேனைகளாகிய பிசாசின் கூட்டங்களுக்காகவே ஆண்டவர் எரி நரகத்தை உண்டாக்கி வைத்துள்ளார். மனிதர்களாகிய நாம் நம்மைப் படைத்து, இம்மட்டும் காத்து, போஷித்து வருகின்ற ஜீவனுள்ள தேவனாகிய

கர்த்தரை சேவியாமல், மனிதர்கள் படைத்த விக்கிரஹங்களையும், நமது வாழ்க்கையில் பிசாசுக்கு இடம் கொடுத்து தேவன் அருவருக்கின்ற அனைத்து அக்கிரமங்களையும் நாம் இந்த பூலோக வாழ்க்கையில் செய்து, அதற்காக மனம் வருந்தாமல், மனந்திருந்தாமல், பாவ விமோசனம் பெறாமல், தொடர்ந்து பாவங்களையே செய்து கொண்டிருப்போமானால் பிசாசு நம்மை நரகத்திற்கு இழுத்துச் சென்றுவிடுவான். நாம் பரலோகம் போவது அவனுக்கு இஷ்டமில்லை. நாம் எப்படியாவது ஏதாவது பாவம் செய்து பிசாசின் வலையில் மாட்டிக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே நம்மை அவன் சுத்தி சுத்தி வந்து கொண்டு இருக்கிறான். “அவன் அழிக்கவும், கொல்லவும், திருடவுமே வருகிறான்” என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. ஆகவேதான் “பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்”னு சத்திய வேதம் நம்மை எச்சரிக்கிறது.

சொர்க்கம், நரகம் இருக்கிறது என பரிசுத்த வேதாகமம் மாத்திரமல்ல. எல்லா மத வேதங்களுமே இவைகள் பற்றிக் கூறுகின்றன. இந்து மதத்தின் கருட புராணத்தில் என்ன என்ன பாவங்களுக்கு என்ன என்ன தண்டனை நரகத்தில் கிடைக்கும் என்று ஒரு பெரிய லிஸ்டே கொடுக்கப்பட்டு இருக்கிறது. சீக்கியர்களுடைய கிரந்தம் கூறுகிறது. இஸ்லாமியர்களின் குரான் கூறுகிறது. இயேசு கிறிஸ்து தமது முதல் பிரசங்கத்திலும், கடைசி பிரசங்கத்திலும் சொர்க்கம், நரகம் குறித்துக் கூறியிருக்கிறார். பரலோகம் குறித்து 24 தடவைதான் சொல்லியிருக்கிறார். நியாயத் தீர்ப்பு, நரகம் குறித்து 56 தடவை கூறியிருக்கிறார். பரிசுத்த வேதாகமத்தின் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தின் 404 வசனங்களில் 191 வசனங்கள் நரகம், நியாயத் தீர்ப்பு குறித்து கூறுகிறது. ‘பாவத்தின் சம்பளம் நரகம்’ என்று ஒரு நூலே எழுதியிருக்கிறேன். அதையும் வாங்கிப் படித்துப் பாருங்கள்.

நாம் நரகம் போவதை விரும்பாத ஒருவர் உண்டென்றால் அது இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே. நாம் இதுவரை செய்த பாவத்திற்கு தண்டனையாக எரி நரகம் சென்றுவிடக் கூடாதேங்கிறதுக்காக நமக்கு வரவேண்டிய தண்டனையை தம்மேலே ஏற்றுக்கொண்டு கல்வாரி சிலுவையிலே கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்தி பாவ விமோசனம்

கொடுத்த தியாகேஷ்வரன் இயேசு ஒருவரே. 'இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை' என்று சம்பூர்ண மஹாபாரதம், தாண்டிய மஹா பிரமாணம், பிரம்ம சூத்திரம், புருஷ சூக்தம், சாந்தோக்கிய உபநிஷத்து, சாதாதப வசனம் என எல்லாமே கூறுகிறது. இயேசு கிறிஸ்துவைத் தவிர, தெய்வம்னு சொல்லப்படுகிற வேறு எதுவுமே மனிதர்களுடைய பாவங்களுக்கு பாவப் பரிகாரியாக, மரிக்கவும் இல்லை. இரத்தம் சிந்தவும் இல்லை.

தெய்வமே மனித அவதாரம் எடுத்து வந்து பலியாகி பாவவிமோச்னம் தர வேண்டும் என்று சித்தர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சைவக் குறவர்கள், பக்த சிரோன்மணிகள், தேவாரம், திருவாசம், திருவுந்தாதி, சைவ சித்தாந்த நூல்களுக்கு அடிப்படை நூலாக இருக்கிற மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம், போற்றி பஃறொடை, அப்பர் தேவாரம், பன்னிரு திருமறைகள் என அனைத்து இந்துமத வேதங்களுமே கூறுகிறது. ஆனால் இதுவரை எந்த தெய்வம் மனிதர்களுடைய பாவங்களுக்காக மரித்திருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோமே. நமக்காக, நமது பாவங்களுக்காக மரித்த இயேசு கிறிஸ்துவை நம்மோட சொந்த இரட்சகராக, குல தெய்வமாக ஏற்றுக் கொண்டு செய்த பாவங்களை அறிக்கை செய்து, நாம் நீரில் முழ்கி ஞானஸ்நானம், கங்கா ஸ்நானம், ஜல தீட்சை எடுக்கின்ற சமயத்தில் இதுவரை செய்த பாவங்களுக்கு பாவ விமோசனம் பெறுகின்றோம். மேற்கொண்டு எந்தப் பாவமும் செய்யாமல் நம்மை பரிசுத்தமாக பாதுகாத்துக் கொள்ள அனுதினமும் இறைவன் கொடுத்த பரிசுத்த வேதாகமத்தை வாசித்து, அதன்படி நாம் நடக்க வேண்டும்.

அது நம்முடைய இந்த மனுஷ ஜீவியத்தில், மனித சுய முயற்சியில் மிகவும் கடினம். நாம் எப்போதும் மிகவும் பலவீன மானவர்கள். 'பாவம் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிறது' என வேதம் கூறுகிறது. ஏதாவது ஒரு பாவத்தில், ஏதாவது ஒரு பலவீன நேரத்தில் நாம் விழுந்து போய் விடுவோம். அதற்கு நமக்கு நல்ல ஒரு ஐக்கியம், சத்சங்கம். ஃபெல்லோஷிப் வேண்டும். அதற்காகவே இறைவன் திருச்சபைகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். அங்கே திருமறையை நமக்கு போதித்து, மேற்கொண்டு பாவங்களை செய்யாதிருக்க நமக்கு போதிப்பார்கள். இதற்காக நாம் மதம் மாறவேண்டும் என்ற அவசியம் இல்லை. நாம்

எப்படி இருக்கிறோமோ அப்படியே இருந்து கொண்டு, நம்மைப் பண்படுத்துகின்ற, பக்குவப்படுத்துகின்ற, பரிசுத்தப்படுத்துகின்ற, பாவங்களை மன்னிக்கின்ற, நம்மை ஒரு பெற்ற தாயைப் போல அரவணைக்கின்ற, ஒரு தந்தையைப் போல தாங்குகின்ற ஒரே கடவுளான இயேசு கிறிஸ்துவை இதயத்தில் ஏற்றுக்கொண்டு, அவர் காட்டிய சத்திய வேதத்தின் பிரகாரம் நாம் நடந்தால், இந்த பூலோக வாழ்க்கையான இம்மைக்கு பிறகு உள்ள மறுமையிலும் காலாகாலத்துக்கும், யுகம் யுகமாக அந்த இறைவனோடு சொர்க்கத்தில், மோட்சத்தில், கைலாசத்தில், வைகுண்டத்தில், பரலோகத்தில் நாம் இருப்போம் என்பது உறுதி. 'சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலை ஆக்கும்' என்று வேதம் கூறுகிறது. சத்தியத்தை போதிக்கின்ற சத்ய நாதன், இந்த பூலோக, மாம்சீகக் கட்டுகளிலிருந்து, ஜென்ப பாவத்திலிருந்து விடுதலை தருகின்ற விடுதலை நாயகன் இயேசு கிறிஸ்து என்கிற அந்த பரமேஷ்வரரை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டால் பரலோகம் செல்வது பரம உறுதி.

ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள் பூமியில் யாரை வணங்குவார்கள்?

பரலோகத்திலுள்ள ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள் யாரை பூமியில் வணங்குவார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. அவர்கள் இந்த பூமியில் உள்ள இப்பிரபஞ்சத்தின் அதிபதியான சாத்தானையும், அவனுடைய கூட்டாளிகளாகிய பேய்களையும் வணங்குவார்கள் என்றே கூறுகிறது. 'உலகத்தோற்ற முதல் அடிக்கப் பட்ட ஆட்டுக்குட்டியினுடைய (இயேசு கிறிஸ்துவினுடைய) ஜீவ புத்தகத்தில் பேர் எழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்' என வெளி 13 : 8 கூறுகிறது.

எனது அன்பான சகோதர, சகோதரிகளே! நீங்கள் யாரை ஆராதிக்கின்றீர்கள் என்பதில் ஜாக்கிரதையாக இருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக, பரிசுத்த ஆவியின் துணையோடு அந்த சர்வேஷ்வரனை ஆராதிக்க வேண்டும். இன்று நாம் உண்மையான தேவனை ஆராதித்து பரலோகம் போகக்கூடாது என்பதில் சத்துருவும் அவன் சேனைகளும் மிகவும் முனைப்பாக செயல்பட்டு பல துர் உபதேசங்களை கிறிஸ்தவர்களின் மத்தியில்

புகுத்தியிருக்கிறான். நாம் அனுதினமும் வேதத்தை வாசித்து அதில் பலப்பட்டால் ஒழிய, நம்மால் துர்உபதேசங்களை இனம் கண்டு கொள்ள முடியாது. துர்உபதேசம் செய்பவர்களும் பரிசுத்த வேதாகமத்தையே பயன்படுத்துகின்றனர். ஆனால் அதன் அர்த்தத்தை திரித்துக்கூறி நம்மை குழப்பத்தில் ஆழ்த்திவிடுவார்கள். அப்படி செய்வதற்கு அவர்களுக்கு வேண்டிய பயிற்சி கொடுக்கப்பட்டு இருக்கிறது. நாம் வேதத்தில் பலப்பட்டு இருக்கவில்லையானால், நல்ல முதிர்ந்த ஒரு விசுவாசியைக்கூட ஒரு நிமிடத்தில் அவர்கள் குழப்பிவிடுவார்கள். ஆகவே ஜாக்கிரதையாக, கவனமாக இருக்க வேண்டும்.

துர் உபதேசத்தில் இருப்பவர்களாலும் அற்புதம், அதிசயங்களைச் செய்ய முடியும். தீர்க்கதரிசனம் உரைக்க முடியும். பிரமாதமாக வசனங்களைக் கூறி பிரசங்கம் செய்ய முடியும். வல்லமையாக அபிஷேகத்தில் நிறைந்து ஜெபிப்பதுபோல காட்டிக்கொள்ள முடியும். அவைகள் எல்லாம் பார்த்து நாம் ஏமாந்துவிடக்கூடாது. இயேசுவின் பெயரால் என்றைக்குமே அற்புதங்கள் நடக்கத்தான் செய்யும். ஆனால் அதற்காக நாம் நெறிதவறியோ, வேதத்திற்கு புறம்பாகவோ செயல்பட்டால் நமது பெயர்கள் ஜீவ புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டு விடும். ‘நமக்கு விரோதமாக துரோகம் செய்பவன் பெயரை நம்முடைய புத்தகத்திலிருந்து அழித்து விடுவோம்’ என ஆண்டவர் யாத் 32:33ல் கூறியிருக்கிறார்.

அற்புதங்களைச் செய்கிறவர் கர்த்தர். அவருக்கே மகிமை

இன்று அநேக ஊழியக்காரர்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை சுவிசேஷமாக அறிவிப்பதற்கு ஆண்டவர் கொடுத்த சந்தர்ப்பத்திற்காக சந்தோஷப்படாமல், ஆண்டவருக்கு நன்றி கூறாமல், அவர் அவர்களுக்குக் கொடுத்த வரங்களையும், வல்லமைகளையும் குறித்தே அதிகம் சந்தோஷப்பட்டு பெருமை பாராட்டிக் கொள்கின்றனர். நான் இத்தனை பேய்களை ஓட்டினேன். நான் ஜெபித்தபோது முடவன் எழுந்து நடந்தான். குருடனுக்கு கண் பார்வை கிடைத்தது. ஊமை பேசினான். கேன்சர் குணமாகியது என்றெல்லாம் தங்களைத் குறித்தே பெருமை பாராட்டி பேசுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் பிசாசின் வலைக்குள் வெகு சீக்கிரம் விழுந்துவிடுவார்கள். ஆண்டவர் அவர்களுக்கு கொடுக்கிற

எச்சரிக்கையைப் பாருங்கள். 'ஆவிகள் உங்களுக்கு கீழ்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப் படாமல் உங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதியிருப்பதற்காக சந்தோஷப் படுங்கள்' என லூக்கா 10 : 20ல் சொல்லப்பட்டு இருக்கிறதே.

பரிசுத்த வேதாகமம் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரிய வேத புத்தகமல்ல. இது இந்த பிரபஞ்சத்தையும், சகல ஜீவராசிகளையும் படைத்த அந்த சர்வேஷ்வரராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் சகல மனுஷருக்கும் கொடுத்த மிகப் பெரிய பொக்கிஷம் இந்த பரிசுத்த வேதாகமம். நாம் எப்படி உண்மையோடு, உத்தமத்தோடு, நீதியோடு, நேர்மையோடு வாழ வேண்டும் என்கிற வாழ்வியலை நமக்கு கற்றுக் கொடுக்கும் ஒரு நீதி நூல் இந்த சத்திய வேதம். இந்த வேதத்தை ஜாதி, மத பேதமின்றி அனைவருமே அனுதினமும் வாசித்து, தியானித்து, வாழ்க்கையில் கடைப்பிடித்து நடப்போமானால் இப்பூமியில் நாம் வாழும் நாட்களிலும் சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும், சகல விதமான ஆசீர்வாதங்களோடும் வாழ முடியும். இந்த வாழ்க்கைக்கு பிறகு உள்ள மறுமையிலும் நித்தியத்திற்கு நாம் இறைவனோடு பரலோகத்தில், மோட்சத்தில் இருக்க வழிகாட்டும் அறநெறி நூலே பரிசுத்த வேதாகமம். பரிசுத்த வேதத்திற்கு ஈடு இணை எதுவுமே கிடையாது என்று நிரூபித்து 'அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்' என்கிற ஒரு நூலே எழுதியுள்ளேன். அதையும் வாங்கிப் படித்துப் பாருங்கள். சத்திய வேதத்தின் ஈடு இணையற்ற தன்மையை புரிந்து கொள்ள முடியும். பைபிளில் இல்லாத விஷயமே கிடையாது. இன்றைய விஞ்ஞானத்திற்கு ஆதாரமும் விவிலியமே என்பதையும் இப்போது நாம் பார்ப்போம்.

விஞ்ஞானம் உண்மையா? அல்லது பரிசுத்த வேதாகமம் உண்மையா?

படித்துப் பட்டம் பெற்றவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் அதற்கு அவர்கள் விஞ்ஞானம் சொல்வதுதான் சரி, உண்மை என்று சொல்வார்கள். ஏனென்றால் கல்வி அறிவு அவர்களின் கண்களை மறைக்கிறது. மேலும் அவர்கள் யாராக இருந்தாலும் ஒருமுறையாவது பைபிளை முழுவதுமாக படித்திருந்தால் இவ்வாறு கூறமாட்டார்கள். அதில் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் கிறிஸ்தவர்கள் என்று

தன்னைக் கூறிக்கொள்கிறவர்கள் கூட பைபிளை முழுமையாக ஒரு தடவை கூட படித்தது கிடையாது என்பதுதான். கிறிஸ்தவரல்லாதவர்கள் பைபிள் கிறிஸ்தவர்களின் வேதநூல். நாம் படிக்கத் தேவையில்லை என எண்ணி ஒதுக்கிவிடுகின்றனர். இப்படிப்பட்ட மனிதர்களைக் குறித்து திருமறை என்ன சொல்கிறது எனப் பாருங்கள். 'ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகள் ஆனதால், அவைகளை அறியவும் மாட்டான்' - 1 கொரி 2 : 14. ஆண்டவர் என்ன சொல்கிறார் பாருங்கள். 'இவைகளை ஞானிகளுக்கும், கல்விமான் களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்' - மத்11:25.

படிப்பு அறிவு இல்லாத பாமர மக்களாய் இருந்த இயேசுவின் சீடர்கள்தான் அவரை மீட்பர் என்று உலகத்திற்கு அறிவித்தனர். இன்றைக்கு நாம் எவ்வளவுதான் படித்துப் பட்டம் பெற்று மேதைகளாக இருந்தாலும், நம்மைத் தாழ்த்தி இயேசுவை முழு இருதயத்தோடு விசுவாசிக்கும்போதுதான் நாம் தேவனையும், அவருடைய வேதத்தையும், அதன் இரகசியங்களையும், மறைபொருளையும் அறிகின்ற அறிவை அடைய முடியும். 'ஞானிகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப் படுத்தும் படி தேவன் உலகத்தில் பலவீனமான வைகளைத் தெரிந்து கொண்டார்' என பரிசுத்த வேதாகமம் 1கொரி 1:27ல் கூறுகிறது.

விஞ்ஞானிகளே வியந்து போற்றும் விவிலியம்

விஞ்ஞானம் சரியா? விவிலியம் சரியா? என்று உலகப் புகழ்பெற்ற பல விஞ்ஞானிகளிடம் கேட்டபோது அவர்கள் அனைவரும் விவிலியமே சரியானது என்று பதில் அளித்துள்ளனர். வேதாகமம் சொல்வதே சரி என்று சொன்ன உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளின் லிஸ்ட்டைப் பாருங்கள்.

1. உஷ்ணத்தை அளக்கும் அளவைக் கண்டுபிடித்த கெல்வின்.
2. பாரோமீட்டரைக் கண்டுபிடித்த பாஸ்கல்.
3. கணக்குபோடும் எந்திரத்தைக் கண்டுபிடித்த சார்லஸ் பேபிக்.

4. குளோரோபாம் என்ற மயக்க மருந்தைக் கண்டுபிடித்த ஜேம்ஸ் சாம்சன்.
5. மின்சார ஜெனரேட்டரைக் கண்டுபிடித்த மைக்கேல் ஃபாரடே.
6. மின்சார மோட்டார் மற்றும் கால்வனா மீட்டரைக் கண்டுபிடித்த ஜோசப் ஹென்றி.
7. கலைடாஸ் கோப்பையைக் கண்டுபிடித்த டேவிட் பிரவெஷ்டர்.
8. புவி ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்த ஐசக் நியூட்டன்.
9. சுரங்கங்களில் பயன்படும் பாதுகாப்பு விளக்கை கண்டுபிடித்த அம்பாரிதேவ்.
10. பாஸ்ட்ரைசேஷன் தடுப்பு ஊசி முறை மற்றும் வெறிநாய்க் கடிக்கான தடுப்பு ஊசி மருந்து இவற்றைக் கண்டுபிடித்த லூயி பாஸ்ட்டர்.
11. தந்தி முறையை கண்டுபிடித்த மோஸ்.
12. வானொலியைக் கண்டு பிடித்த மார்கோனி.
13. நவீன விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படும் பாயோல்.
14. வானசாஸ்திரக் கணித மேதை கப்லர்.

இப்படி இன்னும் எத்தனையோ விஞ்ஞானிகளின் பெயரை சொல்லிக் கொண்டே போகலாம். விவிலியமும் அதில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொன்றும் உண்மை, சத்தியம் என்று விஞ்ஞானிகளே கூறியுள்ளது எத்தனை அதிசயம் அல்லவா? 'தேவனுடைய வார்த்தைகள் அனைத்தும் அதிசயமானதே. பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே, விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்கு பிரியமாயிற்று', என 1கொரி 1:21 கூறுகிறதே.

விஞ்ஞானம் உலகில் தோன்றுவதற்கு முன்பே உலகில் விஞ்ஞானம் தோன்றும் என்று சொன்னதே பரிசுத்த வேதாகமம்தான். தானி 12 : 4 'அப்பொழுது அனேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப் போகும்' என்று கூறியிருக்கிறதே.

மனிதன் குரங்கிலிருந்து வந்தானா?

படித்துப் பட்டம் பெற்ற சில அறிவு ஜீவிகளிடமும் இன்றும் இந்தப் பிரச்சனை இருக்கிறது. கடவுள் 'மனிதனை மண்ணில் இருந்து

தம்முடைய சாயலிலேயே உருவாக்கி தம்முடைய ஆவியையும் அவனுக்குக் கொடுத்தார்' என்று திருமறை ஆதி 1 : 27, 2 : 7 கூறுகிறது. ஆனால் படித்துப் பட்டம் பெற்ற சில அறிவாளிகள் இதை ஏற்றுக் கொள்வதில்லை. மனிதன் குரங்கிலிருந்துதான் வந்தான் என்று சொல்வதிலே சிலர் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். என்ன செய்வது? இன்றைக்கு அனேகரோட செயலைப் பார்க்கும்போது அப்படித்தான் தோன்றுகிறது! திருமறை 'மனிதனைக் கடவுள் தம்முடைய சாயலிலே உருவாக்கினார்' என்று கூறினாலும் சிலர் இல்லை, நாங்கள் குரங்கிலிருந்துதான் வந்திருக்கணும் என்று சொல்கிறார்கள்.

அப்படிச் சொல்கிறவர்களை நாம் விட்டுவிடுவோம். என்ன செய்வது? அவங்களோட பேச்சும், செயலும் அப்படி நம்பும்படியாகத் தான் இருக்கிறது. நம்முடைய செயலை வைத்துத்தான் மற்றவர்கள் நம்மை அடையாளம் கண்டு கொள்வார்கள். ஆகவே நமது செயல்களில் நாம் எச்சரிக்கையாக இருப்போம்.

டார்வினின் குரங்குக் கொள்கை

மனிதன் குரங்கிலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று உறுதியாகச் சொன்னவர்களில் டார்வினும் ஒருவர். தாழ்வான உயிரினங்களிலிருந்து மேலான உயிரினங்கள் வந்தன. பரிணாம வளர்ச்சியில் குரங்கு மனிதனாக மாறுவதற்கு பல லட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கும். ஆகவே அந்த மாற்றத்தை கண்களால் காண முடியாது என்றார் டார்வின்.

விஞ்ஞானம் என்றால் அது கண்களால் காணக் கூடியதாகவும், சோதனைச் சாலைகளில் நிரூபிக்கப்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும். மேலும் மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்று சொல்வதற்கு விஞ்ஞானிகள் இன்னொரு கருத்தையும் சொல்ல வந்தனர். மனிதனின் முதுகெலும்பின் கடைசியில் வால் போன்ற சிறிய எலும்புத் தொடர் ஒன்று உண்டு. இதை காக்சிஸ் (Coccyz) என்று சொல்லுவார்கள். இது குரங்கின் வாலைச் சேர்ந்தது என்றும், குரங்கு உருமாறி மனிதன் ஆனபடியால் அந்த வால் அப்படியே வளராமல் நின்றுவிட்டது என்றும், வால் குரங்குக்கு மட்டுமே தேவை, மனிதனுக்கு தேவையில்லை. அப்படி தேவையில்லாத ஒன்று மனித உடம்பில்

இருக்கத் தேவையே இல்லை. இந்த காக்சிஸ் இருப்பதே மனிதன் குரங்கிலிருந்துதான் வந்தான் என்பதைக் காட்டுகிறது என்று சொல்லி வந்தனர்.

ஆனால் இன்றைய உடற்கூறு வல்லுனர்கள் காக்சிஸ் மனிதனுக்குத் தேவைப்படுகிற, பயன்படுகிற ஒரு உறுப்பு என்று கண்டு பிடித்துள்ளனர். உடம்பில் உள்ள பல தசைகள் இந்த காக்சிஸில்தான் இணைக்கப் படுகின்றன. மனிதன் நேராக நிற்பதற்கு இந்த உறுப்பே உதவுகிறது என்றும் கண்டு பிடித்துள்ளனர்.

பரிணாமக் கோட்பாட்டைப் பரப்புவதற்கு முயன்ற ஹேக்கல் என்பவர் ஏற்கனவே கிடைத்திருந்த சில இன வகைப் படங்களையும், உருவங்களையும் வைத்து மனிதன் மிருகத்திலிருந்துதான் வந்தான் என நிரூபிக்கப் பார்த்தார். ஆனால் அவரோட கண்டுபிடிப்பு போலியானது என்று பின்பு நிரூபணம் ஆகியது.

சார்லஸ் டாசன் என்பவர் தான் கண்டெடுத்த ஒரு மண்டை ஓடு, தடை எலும்புகளை வைத்து அவைகள் சுமார் 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு மனிதனுடையது. இது பில்ட்டெலின் அல்லது ஏவபாந்திரோபஸ் என்னும் இணைப்பு மனிதன்தான் என்று 1929ல் விளம்பரம் செய்தார். ஆனால் பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு 1953ல் ஓகலே, வைனர் என்ற இரு அறிஞர்களும் சார்லஸ் டாசன் சொன்ன தகவல் தவறானது. அவர்கள் கண்டுபிடித்ததாக சொன்ன முக எலும்புக்கூடு செயற்கையாக உருவாக்கப்பட்டதே தவிர இயற்கையானது அல்ல என்று நிரூபித்தார்கள்.

அதோடு மட்டுமல்ல, மனித தோற்றத்திற்கும், குரங்கின் தோற்றத்திற்கும் ஒத்து வராத வேறுபாடுகள் நிறைய இருக்கிறது என்று சொன்னார்கள். நோமோ ஜெனசிஸ் என்ற நூலை எழுதிய சோவியத் விஞ்ஞானியாகிய பெர்க் என்பவர் புல இனங்களிடையே வியக்கத்தக்க விதமாக பல ஒப்புமைகள் இருப்பது உண்மையே. ஆனால் ஓர் இனம் மற்றொரு இனத்திலிருந்து உருவானது என்பதை உறுதியாய் நிரூபிக்கும் ஆதாரம் இன்னும் விஞ்ஞானத்தில் கண்டுபிடிக்கப் ப்டவில்லை என்று எழுதியுள்ளார். ரைன்கே என்ற உயிரியல் பேரறிஞர் 'விஞ்ஞானம் தன் கருத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால், மனிதன்

தொடக்கம் பற்றி நாம் இன்னும் அறியவில்லை என்றே அர்த்தமாகும்' என்று சொன்னார்.

மனிதனும் மிருகமும்

டைனோசர் என்கிற இராட்சத மிருகங்கள் ஒரு காலத்தில் இந்த பூமியில் இருந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் மனிதனுடைய முன்னோடிகள் என்றும், இவைகளிலிருந்துதான் படிப்படியாக மனிதன் தோன்றினான் என்று டார்வின் சொன்னார். ஆக இந்த மிருகங்கள் உலகில் வாழ்ந்த காலத்தில் மனிதன் இல்லை என்றும், அதற்குப் பின்பே மனிதன் தோன்றினான் என்றும் அவர் சொல்லி வந்தார். ஆனால் சமீபத்தில் இல்லினாய்ஸ், கெண்டகி, மிசௌரி, டெக்ஸாஸ் போன்றஇடங்களில் டைனோசர் என்ற மிருகங்களின் காலடி சுவடுகளோடு மனிதனுடைய காலடி சுவடுகளும் காணப்பட்டன என்று கண்டுபிடிக்கப் பட்டு விஞ்ஞானம் தோற்றுப் போனது. இன்று விஞ்ஞானமே, மருத்துவமே மனிதன் மண்ணிலிருந்துதான் உருவாக்கப்பட்ட இருக்க முடியும் என்று பைபிள் சொல்வதற்கு ஆதாரங்கள் இருக்கிறது என்று நிரூபித்து இருக்கிறது. மண்ணை ஆராய்ச்சி செய்த ஆராய்ச்சியாளர்கள் மண்ணிலே 14 விதமான உலோகங்கள் உள்ளன என்பதை கண்டு பிடித்திருக்கின்றனர். மனித உடம்பிலேயும் அதே 14 விதமான உலோகங்கள் இருக்கிறது என்பதையும் கண்டுபிடித்து வேதம் சொல்வதை உண்மை என்று ஒத்துக் கொண்டனர்.

உயிருக்கு அடிப்படையான புரோட்டீன் மூலக்கூறு தற்செயலாக உருவாக மட்டும் சுமார் 10^{234} மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என Du-Novy என்ற விஞ்ஞானி தெரிவிக்கிறார். ஆனால் இந்த உலகம் உருவாகியோ 6 ஆயிரம் ஆண்டுகள் தான் ஆகின்றன.

இந்த உலகமும் அனைத்து உயிரினங்களும் தற்செயலாய் உருவாகி இருக்க முடியாது. ஒரு வீடு தானாக உருவாவதில்லை. அதை கட்டுவதற்கு, உருவாக்குவதற்கு ஒருவர் தேவை. அதேபோல ஒரு கடிகாரம் தானாய் உருவாகிறது இல்லை. அதை உருவாக்கினவர் ஒருவர் இருக்கணும். இந்த உலகமும் ஒரு ஒழுங்கு முறையோடு இயங்குகிறது. எதுவும் தானாகவே ஒரு ஒழுங்கு முறையோடு இயங்குவது இல்லை. இந்த உலகை உருவாக்கும்போதே

அனைத்தையும் முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, பகலுக்கு வெளிச்சம் தர, உயிரினங்கள், தாவரங்கள் செழிக்க வெளிச்சம் உஷ்ணம் தேவை என அறிந்து அதற்காக சூரியனையும், இரவில் குளிர்ச்சிக்காகவும், வெளிச்சத்திற்காகவும், சந்திரனைப் படைத்து, கால, நேரங்களை கணிக்க நட்சத்திரங்களையும், உயிரினங்களின் தேவைக் காகவும், செடி, கொடி, மரம், காய்கனி, தானியங்கள் அனைத்தும் வளர மழையையும், தண்ணீரையும் கொடுக்க இப்படி ஒவ்வொன்றையும் மிகவும் துல்லியமாக திட்டமிட்டு இவைகளை எல்லாம் நமக்குத் தருவதற்கு ஒரு உன்னத தேவன் இருக்கிறார் என்பதை ஒரு சிலர் நம்ப மறுக்கின்றனர். தெய்வமே இல்லை என்று கூறுகின்றனர். அப்படி இவைகளை உருவாக்கியது ஒரு கடவுள் இல்லை. அது முப்பத்தி முக்கோடி தேவர்கள் எனவும் கூறுகின்றனர். அறியாமையினால் இப்படி எல்லாம் கூறுகின்றனர். சகலத்தையும் அறிந்த அந்த அன்புக்குரிய அகிலாண்டேஷ்வரர் இவர்களை மன்னிப்பாராக.

உயிரின் அடிப்படை மூலக்கூறு DNA என்பதாகும். இது அமினோ அமிலம் எனப்படும் ரசாயனப் பொருட்களின் சேர்க்கையால் உண்டானதாகும். ஆகவே உலகத்திலே உயிர் இனம் சில இரசாயனப் பொருட்கள் தாமாகவே சந்தர்ப்ப வசத்தால் ஒன்று சேர்ந்ததால் உருவாகி இருக்கலாம் என விஞ்ஞானிகள் நம்பி வந்தனர். ஆனால் கிறிஸ்தவமோ தேவன் உயிரினங்களை உருவாக்கினார் என்று தெளிவாகச் சொல்கிறது. விஞ்ஞானிகளோ இந்த DNAவை சோதனைக் குழாயில் உருவாக்கி விட்டால் தங்களின் இந்தக் கருத்தை நிலை நிறுத்தி உலகுக்கு தெரிவிக்க முடியுமே என்பதற்காக முயற்சிகள் செய்தனர்.

சந்தர்ப்பவசத்தால் சில ரசாயனப் பொருட்கள் ஒன்று சேர்ந்ததினால் தான் உலகில் உயிரினங்கள் உருவாகின என்ற கருத்தை நிலைநாட்ட விஞ்ஞானிகள் செய்த ஆராய்ச்சி வெற்றியும் அடைந்தது. ஆனால் இங்கேதான் அவர்கள் ஒரு மிகப் பெரிய உண்மையையும் கண்டு கொண்டார்கள். விஞ்ஞானிகள் தாங்கள் உருவாக்கின DNAவுக்கு தேவையான அந்த இரசாயன விகிதத்தை எங்கிருந்து தெரிந்து கொண்டார்கள் என்றால் அது இன்னொரு DNAவிலிருந்துதான். அப்படியானால் அந்த DNAவை உருவாக்கியது யார்?

விஞ்ஞானிகளுக்கு இந்தக் கேள்விக்கு பதில் கூறமுடியவில்லை. குழப்பத்தில் ஆழ்ந்தனர். ஒன்றிலிருந்து இன்னொன்றைத் தயாரிப்பவன்தான் மனிதன். ஆனால் எதுவுமே இல்லாமல் ஒன்றை உருவாக்குகிறவர்தான் இறைவன். அந்த தேவன் இல்லையேல் இந்த உலகமும் இல்லை. இந்த உலகில் ஒன்றுமே இருக்கவும் முடியாது.

டார்வின் வாழ்வின் முடிவு

ஒன்றிலிருந்து இன்னொன்று வந்தது என்று சாதித்த டார்வின் கடைசியில் 'மனிதனிலிருந்து ஏன் இன்னொன்று வரவில்லை' என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திணறிப்போனார். தன்னுடைய தவறான கொள்கையினால் உலகில் தெய்வ நம்பிக்கையில் குழப்பம் வந்ததே என்று மிகவும் மனம் வருந்தினார். விஞ்ஞானத்தில் பல விஷயங்களைக் கண்டுபிடித்ததாக பெருமிதம் கொண்டிருந்த டார்வின், தன் மரணத்திற்குப்பின் தன் உயிர் எங்கே போகும் என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதை எண்ணிக் கலங்கினார். தன் ஆராய்ச்சிகள் எதையும் யாரும் நம்பவேண்டாம் என்று பின்பு அவரே அறிக்கையிட்டார். அன்றைய அரசாங்கமோ அதை அப்படியே மறைத்துவிட்டது. டார்வின் மரிக்கும்போது அவர் அருகில் இருந்த அவருடைய சகோதரியிடம் எல்லா உண்மைகளையும் சொன்னார். வேதமே உண்மை என்றார். 'ஆண்டவராகிய இயேசு என் மீட்பர்' என்று அறிக்கையிட்டபடியே அவர் தன் வாழ்வை முடித்தார். இன்று டார்வினுடைய வீடு பரிசுத்த வேதாகமத்தை அச்சடிக்கும் இடமாக இருக்கிறது.

'என் நினைவுகள் உன் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல என்று கர்த்தர் சொல்லுகிறார்' - சங். 55:8

விஞ்ஞானம் சொல்வதற்கு முன்பே விவிலியம் கூறிவிட்டது

கி.பி. 1530ம் ஆண்டு ரீன் விஷ் என்ற விஞ்ஞானி பூமி அந்தரத்தில் தொங்கிக் கொண்டு இருக்கிறது எனக் கண்டுபிடித்தார். ஆனால் இந்த மாபெரும் விஞ்ஞான உண்மையை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே திருமறை கூறிவிட்டது. 'தேவன் உத்திர மண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து பூமியை அந்தரத்தில் தொங்க வைத்திருக்கிறார்' என யோபு 26 : 7ல் எப்போதோ ஆவியானவர் எழுதிவைத்துவிட்டார்.

பூமி உருண்டையாக இருக்கிறதா அல்லது தட்டையாக இருக்கிறதா என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக இருந்தது. கோபர்நிக்கஸ் என்கிற போலந்து நாட்டைச் சேர்ந்த வானிலை ஆராய்ச்சியாளர் கி.பி. 1543ல் பூமி உருண்டையாய் இருக்கிறது என்று கண்டுபிடித்தார். இதையே நிக்கோலஸ், பீட்மன் என்கிற அறிஞர்களும் சொன்னார்கள். அதற்குப் பின்பு 1616ல் கலிலியோ என்கிற விஞ்ஞானியும் பூமி உருண்டையாக இருக்கிறது என அறிவித்தார். ஆனால் பரிசுத்த வேதாகமமோ பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே பூமி உருண்டையாய் இருக்கிறது என்று 'அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்' என்று ஏசாயா 40:22ல் கூறிவிட்டது.

கி.பி. 960லிருந்து 1278க்கு இடைப்பட்ட காலத்தில்தான் சீனாவில் அச்சுக் கலை வளர்ச்சி அடைந்தது. 1301ல் சீனாவில் பீசெஸ் என்பவர் வெள்ளைக் களிமண்ணால் செய்யப்பட்ட எழுத்துக்களை இரும்புச் சட்டத்திற்குள் அடுக்கி அச்சு எழுத்துக்களை தயாரித்தார். பின்பு இவரே தகர எழுத்துக்களையும் தயார் செய்தார். 1314ல் வாங்சாங் என்கிறவர் உலோகத்தால் ஆன எழுத்துக்களை உருவாக்கினார். கி.பி. 1457ல் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஜான் கூட்டன்பர்க் என்பவர் அச்சுப்பொறிக்கு ஈய எழுத்துக்களை கண்டுபிடித்தார். கிராஸ்மஸ் என்கிற வேதப் பண்டிதரே பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டை முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்டார்.

அச்சு எழுத்துக்கள் 1457ல் கண்டுபிடிக்கபட்டாலும், அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே அச்சு எழுத்துக்கள் ஈயத்தில் கண்டுபிடிக்கப்பட வேண்டியதின் அவசியத்தை திருமறை 'நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப் பட்டால் நலமாயிருக்கும். அவைகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்பட்டு அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளி வெட்டாகவும், ஈய எழுத்தாகவும் பதித்தால் நலமாய் இருக்கும்' என்று யோபு 19:24ல் கூறிவிட்டதே.

18ம் நூற்றாண்டில்தான் விஞ்ஞானிகள் ஆகாய விரிவுகள் ஆப்பில்டன் ஹீவிசைட்டாக உள்ளது என்றும், வான் அலைகள் இவைகளில் மோதியே நமக்கு ஒலியைக் கொடுக்கிறது என்றும் சொன்னார்கள். இதை சத்திய வேதம் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே

'வார்க்கப்பட்ட கண்ணாடியைப் போல் கெட்டியான ஆகாய மண்டலங்களை நீர் அவரோட கூட இருந்து விரித்தீரோ' என்று வேதம் யோபு 34 : 18ல் ஆகாய மண்டலங்களின் தன்மையைக் குறித்து கூறிவிட்டது.

1975ம் ஆண்டு ஜெனிவாவில் கூடிய விஞ்ஞானிகள் ருசியில்லாத பதார்த்தம் எது என்று ஆராய்ந்து முட்டையில் உள்ள வெள்ளைக் கருவுக்கு ருசியில்லை என்று கண்டுபிடித்தனர். ஆனால் திருமறையோ 'முட்டையின் வெள்ளைக் கருவில் சுவையுண்டோ?' என யோபு 6 : 6ல் எப்போதோ கூறிவிட்டது.

கி.பி. 1615ல் வில்லியம் ஹார்வி என்பவர் உயிர் இரத்தத்தில் உள்ளது என்று கண்டுபிடித்தார். ஆனால் 4000 ஆண்டுகளுக்கு முன்பே வேதாகமம் 'மாம்சத்தின் உயிர் ரத்தத்தில் இருக்கிறது' என்று லேவி 17 : 11ல் சொல்லிவிட்டது.

பெட்ரோல் அரேபிய நாடுகளில் அதிகம் கிடைத்தாலும் உலகமெங்கும் சுமார் 7,50,000 எண்ணெய் கிணறுகளில் இன்றைக்கு கிடைக்கிறது. வருஷத்திற்கு சுமார் 2000 மில்லியன் டன் எடையுள்ள எண்ணெயை எடுக்கிறார்கள். இன்னும் இருபது ஆண்டுகளுக்குத்தான் பூமியின் ஆழத்திலிருந்து எண்ணெய் கிடைக்கும் என்று விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அதன் பிறகு எண்ணெய்க் கிணறுகள் வற்றிக் காலியாகிவிடும் என்று கூறுகிறார்கள். இதை ஆண்டவர் எத்தனையோ நூறு ஆண்டுகளுக்கு முன்பாக எரேமியா தீர்க்க தரிசியின் மூலமாக கூறிவிட்டார். 'அதன் கடலை வறளவும், அதன் ஊற்றை சுவறவும் பண்ணுவேன்' - எரே. 51:36.

மனிதன் உண்டாகி எவ்வளவு ஆண்டுகள் ஆகியிருக்கும்?

குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்கிற டார்வினுடைய கொள்கை, இந்த உலகமும், உயிரினங்களும் உருவாகி பல மில்லியன் வருஷங்கள் ஆகியிருக்கலாம் என்றே சொல்லி வந்தன. ஆனால் பரிசுத்த வேதாகமத்தின்படி தேவன் மனிதனையும், இந்த உலகையும் படைத்து 6000 ஆண்டுகளே கடந்துள்ளன என கணக்கிடப்பட்டு உள்ளது. பரிசுத்த வேதாகமத்தில் ஆதாம் தொடங்கி இயேசு கிறிஸ்து வரை வம்ச வரலாறு தெளிவாகக் கூறப்பட்டு இருக்கிறது. இதன்படி

பார்க்கும் பொழுது இவ்வுலகில் மனிதன் தோன்றி 6000 ஆண்டுகளே ஆகிறது என்பது தெளிவாகிறது. இதுவே வேதம் கூறும் உண்மை. இந்த உண்மையை விஞ்ஞானத்தின் அடிப்படையிலேயே பார்ப்போம்.

இன்றைய உலகத்தின் ஜனத்தொகை இந்த உலகமும் மனிதனும் தோன்றி ஒரு சில ஆயிரம் ஆண்டுகளே ஆகின்றன என்று வேதத்தின் உண்மையை நிரூபிக்கின்றன. இன்றைய உலகத்தின் ஜனத்தொகை சற்றேறக்குறைய 500 கோடியாகும். நோவாவின் மூன்று பிள்ளைகளிலிருந்துதான் இன்றைய உலகத்தின் ஜனத்தொகை 500 கோடியாக ஆகியுள்ளது. ஒரு குடும்பத்திற்கு குறைந்தது இரண்டு குழந்தைகள் என்றும், ஒரு சந்ததியின் ஆயுசுக் காலம் சராசரி 43 வருடங்கள் என்றும் வைத்துக் கணக்கிட்டால் இன்றைய ஜனத் தொகையாகிய 500 கோடி ஜனத்தொகை வருவதற்கு 4000 வருடங்கள்தான் ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் டார்வினோ மனித இனம் உருவாகி பல இலட்சம் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றார்.

டார்வினுடைய கொள்கையின்படி மனித இனம் உருவாகி ஒரு மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றால் இன்றைய உலகின் ஜனத்தொகை 10^{2700} ஆக இருக்கும். 10^{2700} என்றால் பத்துக்கு அருகில் 2700 பூஜ்யங்கள் போட வேண்டும். தலை சுத்துகிறதா? இவ்வளவு ஜனத்தொகைக்கு இப்பூமியின் மேல் பரப்பில் இடமில்லை. இருக்கின்ற 500 கோடி மக்களுக்கே இப்போது உணவும், தண்ணீரும் கிடைக்கவில்லை. 10^{2700} மக்கள் தொகை இருந்திருந்தால் என்ன கதி ஆகியிருக்கும்? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். 500 கோடி மக்கள் தொகையை எட்டுவதற்கே 4000 ஆண்டுகள் ஆகும் என்று கணக்கிடப்பட்டு இருப்பதால், இந்த உலகமும், மனிதனும் உருவாகி ஒரு சில ஆயிரம் ஆண்டுகளே ஆகியிருக்கும் என்கிற பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தையே உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளது.

உலகம் உண்டாகி எவ்வளவு வருடங்கள்தான் ஆகிறது?

பரிசுத்த வேதாகமத்தின்படி கடவுள் இந்த பூமி, சந்திரன், கிரகங்கள் மற்றும் உயிரினங்கள் மனிதன் என்று எல்லாவற்றையும் முதல் ஆறு நாட்களில் உண்டாக்கினார் என்று கூறப்பட்டு இருக்கிறது. ஆனால் டார்வினுடைய கொள்கையைக் கொண்ட இந்த விஞ்ஞான உலகமோ,

பூமியும், சூரியனும், சந்திரனும் உருவாகி பல இலட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டது என உறுதியாக சொல்லிக் கொண்டு வந்தது. ஆனால் இன்றைய வான்வெளி ஆராய்ச்சியாளர்கள் திருமறை சொல்வதே உண்மை என்று நிரூபிக்கக்கூடியதாக உள்ளன.

வான வெளியில் 'விண் துகள்கள்' எனப்படுபவைகள் சுற்றிக் கொண்டு இருக்கின்றன. ஒரு வருஷத்திற்கு சுமார் 14.2 மில்லியன் டன் எடையுள்ள விண் துகள்கள் பூமியை நோக்கி விழுகின்றன என ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இந்த உலகம் உண்டாகி சுமார் 5000 மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்று வைத்துக் கொண்டால், இந்த பூமியின் தரையில் சுமார் 54 அடி உயரத்திற்கு இந்த விண்வெளித் துகள்களின் சாம்பல் இந்த பூமியின் மேல் பரப்பில் இருக்க வேண்டும். அவ்வப்போது பெய்யும் மழையினால் பூமியின் மேல் உள்ள விண் துகள்கள் கடலுக்கு அடித்துக் கொண்டு செல்லப்படுகிறது. அங்கு இது 'நிக்கலாக' (Nickel) மாறுகிறது.

கடல் தண்ணீரில் உள்ள நிக்கலின் அளவை கணக்கிட்டுபோது அது சுமார் 8000 ஆண்டுகளாகத்தான் இந்த விண்கற்கள் பூமியில் விழுந்து கொண்டிருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கின்றனர். மேலும் இந்த விண்கற்கள் தூளாகி சந்திரனிலும் விழுவதால் அங்கேயும் 54 அடி உயரத்திற்கு சந்திரனின் மேற்பரப்பில் இந்த சாம்பல் இருக்க வேண்டும். பூமியில் உள்ளதைப் போல இது கரைந்து கடலுக்குப் போய்ச் சேருவதைப்போல, சந்திரனில் கடல் என்ற ஒன்றே இல்லை. சந்திரனில் தண்ணீரே கிடையாது.

சந்திரனில் மனிதனைக் குடியேற்றும் முயற்சி தோல்வியடைந்ததற்கு முக்கிய காரணமே சந்திரனில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட கிடையாது என்பதாலேயே. முதலில் சந்திரனில் மனிதனுடன் விண்கலம் இறங்கிய போது இந்த 54 அடி விண் தூளில் விண்வெளி வீரர்கள் சிக்கிக் கொள்வார்கள் என்று எதிர்பார்த்து அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை எல்லாம் செய்துகொண்டுதான் விண்கலம் அனுப்பப்பட்டது. விண்கலமும் அதில் சிக்கிக் கொள்ளாதபடிக்கு அதில் சில முன்னேற்பாடு களையும், உபகரணங்களையும் இணைத்தே விண்கலம் அனுப்பப்பட்டது. ஆனால் விண்வெளி வீரர்கள் சந்திரனில் காலடி எடுத்து வைத்த போது

விஞ்ஞானிகளை திகைப்படையச் செய்த ஒரு செய்தியையே அவர்கள் பூமிக்கு அனுப்பினார்கள். அதாவது சந்திரனில் 54 அடிக்கு விண் துகள்கள் இல்லை. மாறாக ½ அங்குலம் மாத்திரமே அது உள்ளது என்ற இந்த கண்டுபிடிப்பு ஒரு பெரிய உண்மையை விஞ்ஞான உலகத்திற்கு உணர்த்தியது. அது விண்கற்கள் சுமார் 8000 ஆண்டுகளாகத்தான் இந்த பூமியின் மீது விழுகின்றன என்று. ஆகவே பூமியும் சந்திரனும் உருவாகி சில ஆயிரம் ஆண்டுகளே ஆகின்றன என்பதையே இது நிரூபிக்கிறது.

நயாகரா நீர்வீழ்ச்சி தரும் உண்மை

உலகிலேயே மிகவும் பிரசித்த பெற்றது நயாகரா நீர்வீழ்ச்சியாகும். இந்த நீர்வீழ்ச்சியைக்கூட சில விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்தார்கள். அதிலே அவர்கள் கண்ட உண்மை அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. நயாகரா நீர் வீழ்ச்சியின் நீர் தரையில் கீழே விழும்போது அது விழுகின்ற வேகத்தில் ஒரு வருடத்திற்கு 38 அடி ஆழத்தை அது உண்டு பண்ணுகிறது. இதன்படி நயாகரா நீர்வீழ்ச்சி உண்டாகி சுமார் 3500 ஆண்டுகள்தான் ஆகிறது என்ற உண்மையைத் தெரிந்து கொண்டனர். இதுவரை நயாகரா நீர்வீழ்ச்சி உண்டாகி பல ஆயிரம் ஆண்டுகள் ஆகிறது என்று சொல்லி வந்த விஞ்ஞான உலகம் இதற்குப்பின் அந்த வார்த்தையை உறுதியுடன் சொல்வதை நிறுத்திக் கொண்டது. வேதம் கூறும் வார்த்தைகள் அனைத்தும் சத்தியம். ஏனென்றால் அவைகள் அனைத்தும் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டு எழுதப்பட்டவைகள். 'வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது' என்று சங்கீதக்காரனோடு சேர்ந்து இந்த பிரபஞ்சத்தை படைத்த ஒரே தேவனாகிய இயேசு கிறிஸ்துவை நாமும் துதிப்போம். (சங். 135:5).

நட்சத்திர ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் கண்ட உண்மை

இந்த உலகத்ததை யாரும் உண்டாக்கவில்லை. அது தானாய் உருவானது. சூரியனிலிருந்து வெடித்து சிதறிய ஒரு பகுதிதான் இந்த உலகம் என்று விஞ்ஞானிகள் சொல்லி வந்தனர். ஆனால் சில ஆராய்ச்சிகளில் அவர்கள் ஈடுபட்ட போது அவர்களால் எண்ணியும் பார்க்க முடியாத அளவு சில உண்மைகளை அவர்கள் கண்டு கொண்டார்கள். அதிலே ஒன்று ஹாலி என்கிற வால் நட்சத்திரம்.

வான் வெளியில் அநேக வால் நட்சத்திரங்கள் இருக்கின்றன. 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமியில் இருந்து பார்க்கும்போது மனிதர்களின் கண்களுக்குத் தெரிவது இந்த ஹாலி என்கிற வால் நட்சத்திரம். ஹாலி என்பது ஒரு பிரிட்டிஷ் வான்வெளி ஆராய்ச்சியாளரின் பெயராகும். இவர் பெயரைத்தான் இந்த வால் நட்சத்திரத்திற்கு அவர்கள் வைத்துள்ளார்கள். இந்த ஹாலி நட்சத்திரம் 1986ம் ஆண்டு மனிதர்களின் கண்களுக்குத் தெரிந்தது. இந்த வால் நட்சத்திரத்தின் வால் பகுதி ஒரு நொடிக்கு சுமார் 30 டன் அளவுக்கு எரிந்து கொண்டு இருக்கிறது.

உலகமும் மனிதனும் விண்மீன்களும், நட்சத்திரங்களும் உருவாகி கோடிக் கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றால் இந்த ஹாலி நட்சத்திரம் முற்றிலும் எரிந்து போயிருக்க வேண்டும். 1910ம் ஆண்டு முதன் முதலில் இந்த ஹாலி நட்சத்திரத்தைக் கண்டபோது அதை ஆராய்ச்சி செய்யத் துவங்கிய விஞ்ஞானிகள் திரும்பவும் 1986ம் ஆண்டு அந்த நட்சத்திரத்தைக் கண்டு அதிசயித்தார்கள். எரிந்து கொண்டிருக்கும் இந்த நட்சத்திரம் 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை மனிதர்களின் கண்களுக்குத் தென்படுவது என்பது தானாய் நடக்கும் ஒரு காரியமல்ல. மாறாக இதை இயக்குபவர் ஒருவர் உண்டு என்பதைக் கண்டு கொண்டார்கள். அது மாத்திரமல்ல. இந்த உலகம் உண்டாகி கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டது என்ற எண்ணமும் பொய்யாகி இந்த உலகம் உருவாகி சில ஆயிரம் ஆண்டுகளே ஆகிறது என்கிற பரிசுத்த வேதாகமத்தின் உரையை நிரூபித்துக் கொண்டு இருக்கிறது.

சந்திரனில் நடந்த ஆராய்ச்சியும் வேதாகமத்தின் கூற்றை உறுதி செய்கிறது

பூமி, சந்திரன், சூரியன் எல்லாம் உருவாகி பல இலட்சக் கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டது என்று முன்பு விஞ்ஞானம் கூறிவந்தது. ஆனால் திருமறையோ இறைவன் அனைத்தையும் ஒரே நேரத்தில் உண்டாக்கினார் என்று கூறியது. இந்த உண்மையை பொய்யாக்க வேண்டும் என்று எண்ணிப் பல விஞ்ஞானிகள் அநேக ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அந்த ஆராய்ச்சியின் முடிவுகளோ வேதம்

சொல்வதே உண்மை என்று நிரூபிப்பதாய் இருந்தது. சந்திரனில் நடந்த ஆராய்ச்சியும் அப்படியே நிரூபித்தது.

சந்திரன் உருவாகி லட்சக்கணக்கான வருடங்கள் ஆகியிருந்தால், சந்திரன் முழுவதுமாக உறைந்து போய் இதில் எந்தவிதமான திரவமும் இல்லாது போயிருக்க வேண்டும். அப்படி முழுவதும் திடப்பொருளாக மாறியிருந்தால் அதில் பூமி அதிர்ச்சிகள் போன்ற சந்திர அதிர்ச்சிகள் எதுவும் உருவாக வாய்ப்பில்லை. அப்படி முழுவதும் உறையாமல், உறையா திரவப் பகுதிகள் இருக்குமானால் அங்கே சந்திர அதிர்ச்சிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு விண்வெளிக் கலங்கள் சந்திரனில் இறங்கி இருந்தபோது சந்திரனில் சில கருவிகளை வைத்து ஆராய்ந்தனர். அப்படி வைக்கப்பட்ட கருவிகள் சந்திரனில் திரவ அதிர்ச்சிகள் ஏற்படுகின்ற தகவலை அவைகள் கொடுத்தன. ஆக சந்திரன் உருவாகி இலட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டது என்கிற விஞ்ஞானக் கணக்கு பொய்யாகி சந்திரன் உருவாகி திருமறை சொல்லுகிற சில ஆயிரம் ஆண்டுகளே ஆகின்றது என்கிற உண்மையை உணர்ந்தனர்.

உலகம் உண்டானது அந்த உன்னத தேவனால்

இறைவன் இந்த உலகத்தை எப்படிப் படைத்தார் என்று திருமறை மிகத் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் விஞ்ஞானமோ பூமியும், மற்ற கிரகங்களும் தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு வாயு கோளத்திலிருந்து இவைகள் பிரிந்து வந்துள்ளன. அப்படி அவைகள் தானாக வந்தவைகள் என்று சொல்லி வந்தது. ஆனால் அனைத்து கிரகங்களின் சுழற்சியை வைத்துப் பார்க்கும்போது இந்த பூமி வாயு கோளத்திலிருந்து பிரிந்து வந்தது அல்ல என்பதைக் கண்டுபிடிக்க முடிந்தது.

பூமியும் மற்ற கிரகங்களும் வாயு கோளத்திலிருந்துதான் பிரிந்து வந்திருக்கும் என்றால் அந்த சுழலும் வாயுகோள் சுற்றின திசையிலேதான் எல்லா கிரகங்களும் சுற்ற வேண்டும். மேலும் எல்லா கிரகங்களும் இந்த வாயு கோளத்திலிருந்துதான் வந்திருக்கிறது என்றால் இவைகள் அனைத்தும் ஒரே பக்கத்தில்தான் சுற்ற வேண்டும். இதை கணிதத்துறை வல்லுனர்கள் Law of Conservation of Angular

Momentum என்று அழைப்பார்கள். ஆனால் மெர்குரி என்கிற கிரகமும், வீனஸ் என்கிற கிரகமும் தங்களைத் தாங்களே பூமியைப் போல சுற்றுவதில்லை.

சூரியனை சுற்றுகிற ஓட்டத்தில் வீனஸ் கிரகம் மற்ற கிரகங்களுக்கு எதிர்பக்கத்தில் சுற்றுகிறது. யுரேனஸ் கிரகம் பக்கவாட்டில் 98 டிகிரி சாய்வில் சுற்றுகிறது. இந்த அமைப்பிலுள்ள 32 சந்திரன்களில் 11 சந்திரன்கள் எதிர்புறமாகச் சுற்றுகின்றன. இவ்வாறு கிரகங்கள் எல்லாம் வித்தியாசமான சுழற்சிகளை உடையவைகளாய் இருப்பதால் சுழன்று கொண்டிருக்கிற ஒரு வாயு கோளத்திலிருந்து பூமியும் மற்ற கிரகங்களும் வந்திருக்கும் என்கிற Nubular Theory கேள்விக் குறியாகிப்போனது. 'வான மண்டலங்கள் அவரது கைத்திறனை எடுத்துரைக்கும்' என சங் 18 : 1 கூறுகிறது. தேவனுடைய அநாதி திட்டத்தின்படி இவைகள் எல்லாம் அவரின் கையின் கிரியைகள். இவைகளை யார் மறுத்துக் கூற முடியும்?

பூமியைச் சுற்றியுள்ள காந்த மண்டலம் சொல்லும் உண்மை என்ன?

பூமி, சந்திரன், சூரியன் மற்றும் அனைத்து கிரகங்களும் உருவாகி பல இலட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கும் என விஞ்ஞானம் கூறுவது தவறு என்பதற்கு ஆதாரமாக இதுவரை பலவற்றைப் பார்த்தோம். இந்த நிரூபணங்கள் எல்லாம் இறுதியில் திருமறை கூறுவதையே சரி என்று ஒப்புக் கொள்ள வேண்டிய அவசியத்துக்கு தள்ளப்படுகின்றனர். பூமியைச் சுற்றியுள்ள காந்த மண்டலமும் மேலும் அதை உறுதிப்படுத்துகிறது.

இந்த காந்த மண்டலத்தின் சக்தியின் அளவு பாதியாகக் குறைவதற்கு 1400 ஆண்டுகள் ஆகின்றன. அதாவது 1400 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த காந்த சக்தியின் அளவு முன்பு இருந்ததைவிட பாதியாகக் குறைந்து விடுகிறது. இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் இருந்த காந்த சக்தியின் அளவில் நான்கில் ஒரு பங்குதான் இப்போது இருக்கிறது. இந்த காந்த சக்தி இப்படி குறைந்து கொண்டே போகிறதால், சூரியனிலிருந்து பல தீங்கிழைக்கும் கதிர்கள் மிக அதிகமாக இப்போது பூமியின் மேல் விழுந்து கொண்டு இருக்கின்றன.

இந்த ஆராய்ச்சியை செய்த விஞ்ஞானிகள் ஆரம்பத்தில் பூமி உருவானபோது இந்த காந்த மண்டலத்தின் சக்தி எவ்வளவாய் இருந்திருக்கும் என்று கணக்கிட்டுள்ளார்கள். இதன் பிரகாரம் பார்த்தாலும் பூமி உருவாகி சில ஆயிரம் ஆண்டுகளே ஆகியிருக்கும் என்று கணக்கிட்டு கூறுகின்றனர். பூமி உருவாக்கப்பட்டு பல மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றால் இந்த காந்த சக்தியே இல்லாமல் போயிருக்கும். ஏனென்றால் அது குறைந்து கொண்டே வருகிறதே. இந்த பிரபஞ்சத்தையும், சூரியன், சந்திரன் மற்றும் அனைத்து நட்சத்திரங்களையும் சிருஷ்டித்து அவைகளை அப்படியே அந்தரத்தில் தொங்க விட்டவருக்கு, பூமியில் வாழும் உயிரினங்கள் பூமியில் வாழ்வதற்கேற்ற உடலமைப்பையும், நீரில் வாழும் உயிரினங்களுக்கு அதற்கேற்ற உடலமைப்புகளையும், வானவெளியில் பறந்து வாழும் உயிரினங்களுக்கு அதற்கேற்ற உடலமைப்பு மற்றும் உறுப்புகளையும், உணவுகளையும் படைத்த இறைவனின் சிருஷ்டிப்பை தவறு என்று கூறுவதற்கு அதே இறைவனால் படைத்த மனிதன் தன் சிற்றறிவைக் கொண்டு எவ்வளவுதான் முயன்றாலும் அது சாத்தியமில்லை என்றே இவைகள் நிரூபிக்கின்றன. ஓ... நாம் ஆராதிக்கும் தேவன் எப்பேர்ப்பட்ட சர்வ வல்ல சர்வேஷ்வரன்! இதை வேதாகமம் எவ்வளவு அழகாய்க் கூறுகிறது எனப் பாருங்களேன். 'கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திவாரப் படுத்தினீர். வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாக இருக்கின்றது. அவைகள் அழிந்து போகும். நீரோ நிலைத்திருப்பீர். அவைகள் எல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப் போகும்' - எபி. 1:10, 11.

வேத வசனமே சகல விதமான படைப்புக்களுக்கும் ஆதாரமாய் இருக்கிறது.

நம்மில் எத்தனையோ பேர் வேதாகமத்தை வாசிக்கும்போது அதில் உள்ளவைகள் புரியவில்லை என்ற முடிவுக்கு வந்து விடுகிறோம். பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்படாத விஷயங்களே இல்லை. நமது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விஷயங்களும் அதில் இருக்கிறது. ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் நாம் எப்படி இருக்கணும், எப்படி நடந்து கொள்ளணும் என்று தேவன் தெளிவாக பரிசுத்த வேதாகமத்தில் கூறியிருக்கிறார். ஆனால் நாமோ நமது வாழ்க்கைக்கு

தேவையான எத்தனையோ ஆலோசனைகளுக்கு மனிதர்கள் தங்களின் மண்டை அறிவில் எழுதும் பத்திரிக்கைகளிலும், கதைப் புத்தகங்களிலும் கவனம் வைத்து ஏமாந்து போகிறோம். ஆனால் நமது வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை உண்மைகளையும், ஆலோசனைகளையும் கூறும் ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம் மட்டுமே.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் 'நான் உங்களுக்கு சொல்லுகின்ற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது' - யோ 6 : 63. வான்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்ட கிறிஸ்தவரல்லாத ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்கிற விஞ்ஞானி தன் ஆராய்ச்சியின் முடிவிலே 'இந்த உலகமும், அதைச் சுற்றியுள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எல்லாம் அப்படியே தானாக வந்தது, உருவானது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது' எனக் கூறினார். மேலும் 'நம் அறிவுக்கு எட்டாத ஏதோ ஒரு சக்திதான் இவைகள் அனைத்தையும் உருவாக்கி இருக்க முடியும். அப்பேர்ப்பட்ட சக்தியை நாம் அறிய வேண்டுமானால், சகல படைப்புகளும் உருவாக Time, Space, Matter, Force, Motion என்னும் ஐந்து காரியங்கள் அவசியம். இந்த ஐந்து காரியங்களையும் வைத்து ஆராய்ச்சி செய்தால் இவை அனைத்தையும் படைத்த ஒரு மகத்துவமான தேவன் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

இதன் அடிப்படையில் இந்த படைப்புகளுக்கு ஆதாரம் பரிசுத்த வேதாகமத்தில் எங்கே இருக்கிறது என்று அவர் பரிசுத்த வேதாகமத்தை ஆழ்ந்து படிக்கும்போது அவைகள் ஆதியாகமம் முதல் அதிகாரத்திலேயே இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு போனார். 'ஆதியிலே' என்ற வார்த்தை Time ஐ அதாவது காலத்தைக் குறிக்கிறது. 'வானத்தை' என்பது Space ஐயும், அதாவது வெளியையும், 'பூமி' என்கிற வார்த்தை Matter அதாவது வஸ்துவையும் குறிக்கிறது. 'ஆவியானவர்' என்ற வார்த்தை Force அதாவது உந்து விசை என்பதையும், 'அசைவாடிக் கொண்டிருந்தார்' என்பது Motionஐயும் அதாவது இயக்குதலையும் குறிக்கிறது என்று ஆதி 1 : 1, 2ல் கண்டு அப்படியே ஆச்சரியப்பட்டுப் போனார்.

விஞ்ஞானத்தில் இருப்பதைத்தான் கண்டுபிடித்துச் சொல்ல முடியும். ஆனால் பரிசுத்த வேதாகமமோ அது எப்படி யாரால் உருவானது என்று மிகவும் உறுதியோடு சொல்லுகிறது. 'வானமும் பூமியும் ஒழிந்துபோம். என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை' என மாற்கு 13 : 31ல் ஆண்டவரே சொல்லியிருக்கிறாரே.

ஒளியாக இருக்கிற சக்தி எப்படி உருவாகியது?

விஞ்ஞானத்தில் சக்தியைக் குறித்து இரண்டு அடிப்படை விதிகள் இருக்கின்றன. இதை Laws of Thermo Dynamics என்று கூறுவர். இதிலே முதல் விதி சக்தியைப் பற்றிக் கூறும்போது ஒளிசக்தி என்பது இனி உருவாக்கப்படுவதுமில்லை. அழிக்கப்படுவதும் இல்லை எனக் கூறுகிறது. ஆதியிலே உருவாக்கப்பட்ட சக்தி வெவ்வேறு சக்தியாக உருமாறுகிறதே யன்றி, புதிய சக்தியாக அவைகள் உருவாகிறது இல்லை. உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும் சக்தியாகவே இருக்கின்றன. சக்திதான் உலகில் உள்ள பொருட்களாக மாறி இருக்கின்றன. அதே போல ஒரு பொருளை சக்தியாகவும் மாற்றலாம். உதாரணமாக மரம் என்கிற ஒரு பொருளை எரித்தால் அது வெப்ப சக்தியை உண்டாக்குகிறது. அல்லது வெப்ப சக்தியாக மாறுகிறது. எனவே சக்தி பொருளாகலாம். பொருள் சக்தியாகலாம். இதை ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார். ஆனால் அவரால் இன்னொன்றை கண்டுபிடிக்க முடியாமல் திணறிப்போனார். அதாவது முதல் சக்தியான அந்த ஒளி சக்தி எப்படி உருவானது என்று அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. அந்த முதல் சக்தியான ஒளி சக்தி எப்படி, யாரால் உருவானது என்ற கேள்விக்கான விடையை பரிசுத்த வேதாகமமே கொடுக்கிறது.

ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் இரண்டாம் வசனத்தை வாசித்துப் பாருங்க. உண்மை விளங்கும். 'ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்' என்றும் 'ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்' என்றும் வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் அசைவாட்டப்படவில்லை. மாறாக அவரே அசைவாடிக் கொண்டிருந்தார். அவருக்குள் சக்தி இருந்தது. அவர் அசைவாட, அசைவாட உராய்வு ஏற்பட்டு வெப்ப சக்தி உண்டாயிற்று.

பின்பு உராய்வு அதிகமாகி ஒளி உண்டாயிற்று. பின் இன்னும் அசைவாட, அசைவாட ஒலி சக்தி ஒளி சக்தியாக உருவானது.

இந்த சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து பொருளாக மாற்றப்பட்டன. Energy was converted into matter. ஏழாம் நாளிலோ தேவன் பணியை 'முடித்து ஓய்ந்தார்'. அதனாலே அதுக்குப் பிறகு சக்தி உருவாவதை விஞ்ஞானத்தாலே காண முடிவதில்லை. சக்தி உலகத்தின் சிருஷ்டிப்பில் முதல் ஆறு நாட்களில் உருவாக்கப் பட்டு முடிந்துவிட்டது. இப்பொழுது சக்தி மாற்றம் மட்டுமே நடக்கிறது. தேவனே ஒளியும், ஒளி சக்தியுமானவர். அவருக்குள்ளிருந்தே அனைத்தும் உருவானது. அனைத்திற்கும் ஆதாரம், மூலம், வித்து, கர்த்தர், தேவன் ஒருவரே!

'பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு (இயேசுவுக்கு) வெளிப் படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்' - மத். 11:25.

உயர்விலிருந்து தாழ்வா? தாழ்விலிருந்து உயர்வா?

சக்தியைக் குறித்து விஞ்ஞானம் கூறும்போது சக்தி என்பது இனி உருவாக்கப்படுவதுமில்லை. அழிக்கப்படுவதுமில்லை என்று முதல் விதி மிக உறுதியாகச் சொல்லுகிறது. சக்தியைக் குறித்த இரண்டாம் விதியோ ஒரு குறிப்பிட்ட அளவுள்ள சக்தி மற்றொரு சக்தியாக மாற்றப்படும்போது பயனுள்ள மொத்த சக்தியிலே ஒரு பகுதி வீணாய் செலவழிந்து போகும் என்று தெரிவிக்கிறது. இந்த சக்தி மாற்றம் தான் இன்று இந்த உலகிலே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது?

உலகிலே ஒரு சக்தி இன்னும் இன்னொரு சக்தியாக மாற்றப்பட்டுக் கொண்டே இருப்பதால் மேலான நிலையில் இருந்து தாழ்வான நிலமைக்கு உலகத்தின் சக்தி சென்று கொண்டே இருக்கிறது. இந்த உண்மையைக் காணும்போது விஞ்ஞான உலகமே ஆடிப்போய் விட்டது. பெரிய சலசலப்பே உண்டானது. காரணம் டார்வினுடைய விஞ்ஞான ஆராய்ச்சியோ தாழ்வான நிலையில் இருந்துதான் உயர்வான நிலமைக்கு உயிரினங்கள் உருமாறி வந்ததாக சொன்னது. ஆனால் சக்தியைக் குறித்த விஞ்ஞான ஆராய்ச்சியோ மேலான

நிலமையில் இருந்த சக்தி, கீழான நிலமைக்கு செல்வதாக கண்டுபிடிக்கப்பட்டதே விஞ்ஞானிகளிடையே இந்த சலசலப்புக்கு காரணம்.

ஆண்டவரே சொல்லியிருக்கிறாரே 'என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல' வென்றும் கர்த்தர் சொல்லுகிறார். - ஏசாயா 55:8

விஞ்ஞானிகளால் ஏன் நட்சத்திரங்களை எண்ணிவிட முடியவில்லை?

சூரியனிலிருந்து பூமிக்கு கிடைக்கும் சக்தி, சூரியனின் வெளிச்சம், நட்சத்திரங்களின் எண்ணிக்கை அவற்றின் தூய்மை எல்லாமே தேவனுடைய எல்லையில்லாத மகத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. நம் மனித அறிவால் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவுக்கு எண்ணி மாளாத அற்புதங்கள், அதிசயங்கள், படைப்பின் இரகசியங்கள் எல்லாம் இறைவனுடைய படைப்பில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நினைத்துப் பார்த்து பிரமித்து மலைக்கத்தான் வேண்டியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட சர்வவல்ல தேவன் நமக்காக பரிதவித்து, மனித அவதாரம் எடுத்து வந்து, சகல பாடுகளையும் நமக்காக அனுபவித்து, இறுதியில் நமக்கு வரவேண்டிய தண்டனையையும் தான் ஏற்றுக் கொண்டு அனைத்து சித்திரவதை களையும், நிந்தைகளையும், அவமானங்களையும் பொறுமையாக சகித்து அனுபவித்து, நமக்காக இரத்தம் சிந்தி மரித்து நமக்கு பாப விமோசனம் கொடுத்தாரே அந்த தியாகத்தை, அன்பை, எல்லை இல்லாத கருணையை நினைத்து அவருக்கு ஒவ்வொரு நிமிடமும் நன்றி பலி ஏறெடுத்து அவரை ஆராதிக்க வேண்டும். அந்த சர்வ வல்ல சர்வேஷ்வரரின் மகத்துவங்களை, சிருஷ்டிப்பின் வினோதங்களை இப்போது பார்ப்போம்.

வான மண்டலத்தில் எண்ணிமாளாத நட்சத்திரங்கள் கூட்டம் கூட்டமாக இருக்கின்றன. இவற்றை நட்சத்திர மண்டலங்கள் எனக் கூறுவார்கள். ஆங்கிலத்தில் Galaxy என்பர். ஒவ்வொரு கேலக்சியிலும் 100 மில்லியனுக்கும் அதிகமான நட்சத்திரங்கள் ஈர்ப்பு விசையால் இணைந்து இருக்கின்றன. இப்படி பல கேலக்சிகள் ஒன்று சேர்ந்து

கொத்துக் கொத்தாகவும் இருக்கின்றன. இப்படி பல கேலக்சிகள் ஒன்று சேர்ந்த கொத்தை கிளஸ்ட்டர்ஸ் (Clusters) என்பார்கள். நம்முடைய பூமி என்கிற இந்த கிரகம் இருக்கும் கேலக்சியை பால் வெளி அதாவது Milk way என்று அழைப்படுகிறது. நாம் பால்வெளி இருக்கும் கேலக்சியின் கொத்தில் மட்டும் இன்னும் 20 கேலக்சிகள் இருக்கின்றன.

நாம் வாழும் இந்த பூமி இருக்கும் கேலக்சியான இந்த பால்வெளி இருக்கும் கேலக்சி கொத்தை லோக்கல் குரூப் என்று அழைப்பர். சில கேலக்சி கிளஸ்ட்டரில் 10,000 கேலக்சிகள் கூட இருக்கும். சுமார் 100 பில்லியன் நட்சத்திரங்கள் சேர்ந்தது ஒரு கேலக்சி என்று பார்த்தோம். சுமார் 100லிருந்து 10,000 கேலக்சிகள் சேர்ந்தது ஒரு கிளஸ்ட்டர் ஆகும். இந்த கிளஸ்டர்கள் எல்லாமே வானவெளியில் அப்படியே அந்தரத்தில் ஓடிக்கொண்டு இருக்கின்றன. என்ன தலை சுத்துகிறதா? கொஞ்சம் பொறுங்கள். அதுக்குள்ளேயே தலை சுத்தினா எப்படி? இன்னும் நிறைய விஷயங்கள் இருக்குதே. ஒண்ணு ஒண்ணாப் பார்ப்போம்.

Gama Cluster என்று அழைக்கப்படுகின்ற ஒன்றின் வேகம் ஒரு செகண்டிற்கு 7000 கிலோமீட்டர். ஒவ்வொரு கிளஸ்ட்டரில் உள்ள கேலக்சியிலும் கூட ஒரு செகண்டிற்கு பல நூறு மைல்கள் வேகத்தில் சுற்றிக் கொண்டு இருக்கின்றன. 1930வரை சுமார் 100 மில்லியன் நட்சத்திரங்கள்தான் வானவெளியில் இருப்பதாக விஞ்ஞானிகள் கருதினார்கள். ஆனால் இப்போது 40 Sextillian நட்சத்திரங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் நினைக்கின்றனர். 40 செக்ஸ்டில்லியன் என்றால் 40க்கு பக்கத்தில் 22 பூஜ்ஜியங்களைப் போட்டுக் கொள்ளுங்கள். எண்ணிப் பார்க்க முடியுமா? இல்லை கிறுகிறுன்னு வருதா?

பல ஆராய்ச்சிகளுக்குப் பிறகு இன்றைய வான சாஸ்திர நிபுணர்கள் வானவெளியில் உள்ள நட்சத்திரங்களை எண்ணவே முடியாது என்று அறிக்கையிட்டுவிட்டனர். அந்த அறிக்கையை அவர்கள் எத்தனையோ ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து, கலந்து ஆலோசித்தபின்பே இந்த அறிக்கையை வெளியிட்டனர். இதற்காக எத்தனையோ மில்லியன் கணக்கில் பணத்தை செலவழித்துவிட்டனர். ஆனால் பரிசுத்த வேதாகமமோ எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே இந்த

உண்மையை உலகத்திற்கு சொல்லிக் கொண்டு வருகிறது. 'வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும், கடற்கரை மணல் அளக்கப் படாததுமாய் இருக்கிறது போல' என எரே 33 : 22ல் இறைவனின் படைப்பை சிலாகித்து எழுதி வைக்கப்பட்டு இருக்கிறது.

நட்சத்திரங்களை, கிரகங்களை எண்ண முடியாது. அவைகள் எண்ணி முடியாதவைகள் என விஞ்ஞானிகளே பல ஆண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு தெளிவாகச் சொல்லிவிட்டனர். ஆனால் இங்கே நம்ம ஆட்களோ 12 நட்சத்திரங்கள்தான் இருக்கிறது. நவகிரகங்கள்தான் இருக்கிறது என்று சொல்லி, ஜாதகங்கள் கணித்து, அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு தெய்வத்தை உண்டாக்கி, அதற்கு ஷேத்திரங்களை உண்டாக்கி, அதற்குரிய பூஜைகள் என்றெல்லாம் உருவாக்கி, துன்பத்திலும், துயரத்திலும், கஷ்டத்திலும், பிரச்சனையிலும் வாழும் மக்களை ஏமாற்ற நவக்கிரஹ ஹோமம் செய்யணும், கிரஹ தோஷம் கழிக்கணும், அதுக்கு இந்த ஷேத்திரம் போய் இன்ன பூஜை பண்ணு என்றெல்லாம் கூறி ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கின்றனர். எப்படியாவது நமது பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு கிடைக்காதா என்று ஏங்கித் தவிக்கிற மக்கள் இப்பேர்ப் பட்டவர்களின் ஏமாற்று வலையில் வீழ்ந்து ஏமாறுகின்றனர். ஜோசியம், ஜாதகம், குறி சொல்லுதல், அருள்வாக்கு சொல்லுதல் எல்லாமே சிலர் அடுத்தவர்களை ஏமாற்றிப் பிழைக்க உதவும் கருவிகளே. நட்சத்திரங்களையோ, கிரஹங்களையோ வழிபடுவதினால் நமது தோஷங்கள், கஷ்டங்கள் நீங்கப் போவது இல்லை. இந்த கோடானுகோடி நட்சத்திரங்களையும், கிரஹங்களையும் படைத்த அந்த சர்வ வல்ல சர்வேஷ்வரனாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிக் கதறினால்தான் விமோசனம் கிடைக்கும்.

மனிதன் சந்திரனில் வாழமுடியுமா?

அப்பெல்லோ - 11 சந்திரனில் இறங்கி வான்வெளி வீரர் ஆர்ம்ஸ்டிராங் சந்திரனில் காலடி எடுத்து வைத்தவுடனேயே இங்கு பூமியிலே அநேகருக்கு தலை கால் புரியாமல் போய்விட்டது. கடவுளாவது ஒண்ணாவது, ஒன்றும் இல்லை. மனிதன் நினைத்தால் என்னவென்னாலும் சாதிக்க முடியும் என்று துள்ளிக் குதிக்க ஆரம்பித்தார்கள். சந்திர மண்டலத்தில் வாழ்வதற்கு இப்பொழுதே

உங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுங்கள் என்று உலகம் முழுவதும் விளம்பரமும் செய்யத் துவங்கினர். இதையும் நம்பி எத்தனையோ பேர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யவும் வந்தனர். ஆனால் அதற்குப் பின் நடந்த பல ஆராய்ச்சிகளுக்குப் பிறகு விஞ்ஞானிகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? சந்திரனில் மனிதக் குடியிருப்புகளை அமைப்பது என்பது சாத்தியமில்லாதது என்று அறிக்கை இட்டனர்.

வானவெளி ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கமே சந்திரனில் மனிதக் குடியிருப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே. ஆனால் மனிதன் சந்திரனில் வாழமுடியாது என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்தனர். இந்த முடிவுக்கு விஞ்ஞானிகள் வருவதற்கு என்ன காரணம்? சந்திரனில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. இதனால் விண்வெளி வீரர்களை சந்திரனுக்கு அனுப்பும் முயற்சியை அப்பெல்லோ – 11னோடு நிறுத்திவிட்டனர்.

விண்வெளி ஆராய்ச்சிக்கு இவ்வளவு பெரிய தோல்வி ஏன்? மனிதன் சந்திரனில் வாழ முடியாதா? அப்படி என்றால் மனிதன் எங்கு வாழ்வதற்குப் படைக்கப்பட்டான்? என்ற கேள்விக்கு பதிலைக் காண வேண்டுமானால், நாம் வானவெளி ஆராய்ச்சிக்கூடத்திற்கு சென்று ஆராய வேண்டாம். மாறாக ஆண்டவர் நமக்கு கொடுத்த பரிசுத்த வேதாகமத்தை பார்த்தாலே போதும். அதில்தான் ஆண்டவர் தெளிவாக எழுதி வைத்திருக்கிறாரே. சங் 115 : 16ஐ வாசியுங்கள். ‘வானங்களை சிருஷ்டித்து பூமியை வெறுமையாய் இருக்க சிருஷ்டி யாமல் அதை (மனிதர்களின்) குடியிருப்புக்காகச் செய்து படைத்தார்’. இந்த பிரபஞ்சத்தைப் படைத்து, அவைகளை எதற்காகப் படைத்தார் என்பதையும் அவரே தெளிவாக எழுதியும் வைத்திருக்கிறாரே. அப்பேர்ப்பட்ட அந்த பரிசுத்த வேதாகமத்தை நாம் அனுதினமும் வாசிக்காமல் இருந்தாலோ, அது கிறிஸ்தவர்களின் வேதம், மற்றவர்களுக்குரியது அல்ல என்று ஒதுக்கி வைத்தாலோ நஷ்டம் யாருக்கு? நமக்குத்தானே. ஆண்டவரே பரிசுத்தவான்களைக் கொண்டு எழுதி வைத்ததை சரியாகப் புரிந்து கொள்ளாமலோ, நம்பாமலோ, ஆண்டவர் சொன்னதையும் மீறி ஆராய்ச்சியில் ஈடுபட்டாலோ இப்படித்தான் ஆகும்.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எதற்காகப் படைக்கப்பட்டன?

இதற்குண்டான பதில் திருமறையிலே தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. தேவன் பகலை ஆள பெரிய சுடராகிய சூரியனையும், இரவை ஆள சிறிய சுடராகிய சந்திரனையும், நட்சத்திரங்களையும் படைத்தார் என்று ஆதி 1 : 14 - 18 கூறுகிறது. 'இவைகளை அடையாளங்களுக்காகவும், காலங்களையும், நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காக தேவன் படைத்தார்'. மேலும் திருமறை சொல்வதைப் பாருங்கள் 'சந்திரனைக் காலக் குறிப்பிற்காக தேவன் படைத்தார்' - சங்104:10.

உலகத்திலேயே சந்திரனைக் கொண்டுதான் வருடக் கணக்கையும், மாதக் கணக்கையும் கணக்கிடுகிறார்கள். அப்படியென்றால் இறைவன் சந்திரனை காலத்தை கணக்கிட்டு குறிப்பதற்காகத்தான் படைத்தாரே தவிர, மனுஷன் போய் அதில் குடியிருப்பதற்காக அல்ல. அதோடு மட்டுமல்ல. நித்திய பேரின்ப வாழ்வை நமக்குக் கொடுப்பதற்காகத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே இந்த பூமியில் மனித அவதாரம் எடுத்து வந்தார். அந்தப் பேரின்ப வாழ்வைத் தேட வேண்டிய மனிதனோ அநியத்தியமான வாழ்வுக்காக காலத்தையும், நேரத்தையும், பணத்தையும் ஆராய்ச்சி என்ற பெயரிலே வீணடித்துக் கொண்டு அலைகிறான். இப்படி மதி கெட்டு அலையும் மனிதனின் செயல் எல்லாம் நிலைக்குமா? என்றால் அதுதான் இல்லை. வேதம் யாக் 4 : 6ல் என்ன சொல்லுகிறது என்று பாருங்கள், 'ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்' மேலும் லூக்கா 1 : 51ல் 'இதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களை சிதறடித்தார்' என்றும் கூறுகிறது.

'வானத்துக்கு ஏறி சிங்காசனம் அமைப்பேன்' என்பதெல்லாம் சாத்தானின் குணமாகும். பிசாசு கூட முன்பு இதேபோல விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டான். ஆனால் அவனோடு முடிவு என்ன ஆச்சு? 'நான் வானத்துக்கு ஏறுவேன். தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். வட புறங்களில் உள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்,

உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும், நீ உன் இதயத்தில் சொன்னாயே, ஆனாலும் நீ அதளமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்' என்று ஏசாயா 14 : 13 - 15ல் ஆண்டவர் சொல்லிவிட்டார்.

இது சாத்தானுக்கு மட்டுமல்ல. இன்று இந்த பூமியில் தன்னை ஆன்மீக குரு, ஜகத் குரு, சித்தர்களுக்கெல்லாம் தலையாய சித்தர் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, தன்னை வணங்குவதால் அந்த சிவனையும், விஷ்ணுவையும், அல்லாவையும், கிறிஸ்துவையும் வணங்குவதற்கு சமம். இவர்களாக இருப்பதுவும் நானே என்று சொல்லிக் கொண்டு திரிகின்ற அனைவருக்கும் இதுவே கதியாகும். அப்படிச் சொல்லிச் சொல்லி உலகை ஏமாற்றி, இன்று மரித்து அடக்கம் பண்ணப்பட்டவர்களின் சமாதிகளுக்கு பூஜையும், தூப தீபங்களையும், மந்திர உச்சாடனங்களையும் செய்பவர்களுக்கும், அதை செய்வதற்கு ஊக்குவிப்பவர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும்.

கடவுள் ஒருவர்தான் குருவாக இருக்க முடியும். மனிதர்கள் தம்மை கடவுள் ஸ்தானத்திற்கு உயர்த்தினாலோ அல்லது நாம் அவர்களை கடவுள் ஸ்தானத்திற்கு உயர்த்தி அவர்களை வணங்கினாலோ அதுவும் தேவதூஷணமே. அதுவும் பாவமே. அப்படி இறந்தவர்களின் போட்டோவை வைத்து அல்லது ஒரு விக்கிரஹத்தின் முன்பாக தியான நிலையில் அமர்ந்திருப்பது போல ஒரு போட்டோ எடுத்து, அதை கண்ணாடி பிரேம் போட்டு அதற்கு பூ மாலை அணிவித்து, அர்ச்சனைகள் செய்து, கலச விளக்கு வேள்வி பூஜைகள் எல்லாம் செய்து, மந்திர உச்சாடனங்கள் செய்வதால் தேவ அனுக்கிரஹம் கிடைத்து விடாது. அப்படி வீட்டில் வைத்து பூஜைகள் செய்யும் போது அந்தப் பகுதியில் உள்ள அசுத்த ஆவிகள்தான் அங்கே வந்து ஆளுகை செய்யும்.

தேவதூதனாகிய லூசிபர் தேவனுக்கு கீழ்படிந்து அவரை மகிமைப் படுத்துவதை விட்டுவிட்டு, நான் வானத்துக்கு ஏறுவேன், அங்கு சிங்காசனத்தை அமைப்பேன், தேவனுக்கு சமமாவேன் என்று சொன்னான். அதனால் அவன் தள்ளப்பட்டான். சாத்தானாக, பிசாசாக மாறிப்போனான். அதே போல் வானவெளி ஆராய்ச்சியில் ஈடுபட்ட மனிதனும் நான் வானத்துக்கு ஏறுவேன். அங்கு என் அதிகாரத்தை

நிலை நாட்டுவேன் என்றெல்லாம் அகந்த சிந்தை கொண்டு, தேவன் இல்லை, கடவுளை நம்புகிறவன் முட்டாள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு திரிந்தனர். இதற்கு இறைவன் என்ன பதில் கொடுத்தார்? 'நீ கழுகைப் போல உயரப் போனாலும், நீ நட்சத்திரங் களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்து உன்னை நான் விழத் தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்று ஒபதியா 1:4 கூறுகிறது.

இதன் பலன்தான் 1978ம் ஆண்டு காஸ்மோஸ் 954 என்கிற விண்கலம் பூமியின் மேல் விழுந்தபோது உலகமே கலங்கியது. கடவுளே கிடையாது என்று சொல்லி வந்த ரஷ்யர்களோ பயந்து அலறிவிட்டார்கள். 1979ம் ஆண்டு உலக விஞ்ஞானிகள் எல்லாம் ஒன்றிணைந்து பெரும் சிரமத்துடன் ஸ்கைலாப் என்கிற விண்கலத்தை அனுப்பினார்கள். அதுவும் பூமியின் மீது திரும்பி வந்து விழுந்துவிட்டது. திரும்பவும் காஸ்மோஸ் 1402 என்கிற விண்கலம் பூமியின் மேல் வந்து விழுந்தது. இப்படி அடுத்து அடுத்து நடந்த சம்பவங்களால் உலகமே தத்தளிப்பிற்குள்ளானது. இதற்குப் பிறகுதான் மனிதன் தேவனுக்குப் பயப்படத் துவங்கினான்.

இப்பொழுது வானவெளியில் என்ன என்ன இருக்கிறது என்பதைத்தான் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்கிறார்களே ஒழிய அங்கே போய் இருப்பதற்குரிய ஆராய்ச்சி செய்வதை விட்டுவிட்டார்கள். மனித முயற்சிகள் எல்லாம் வீணாகிப் போகின. 1 கொரி 3:20ல் 'ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறது' என்று எழுதப்பட்டு இருக்கிறதே.

உள்ளத்தில் அகங்காரம் கொண்டவர்கள் எந்த சூழ்நிலையிலும் தள்ளப்படுவார்கள். தாழ்மை உள்ளவர்களையே தேவன் பார்க்கிறார். அவருக்கு கீழ்படிந்து அவரது வார்த்தையைக் கடைப்பிடிப்பவர்கள் உயர்த்தப்படுவார்கள். விண்வெளி வீரர் ஜிம் இர்வின் என்பவர்தான் சந்திரனில் வாகனம் ஓட்டியவர். அவர் சொன்னார், 'மனிதன் சந்திரனில் நடந்தான் என்பதைவிட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியின் மீது நடந்தார்' என்பதுதான் மிகவும் உன்னதமானது என்று. வானத்தையும் பூமியையும், சகல ஜீவராசிகளையும் படைத்த அந்த பரமேஷ்வரனே மனித அவதாரம் எடுத்து வந்து இந்த பூமியின் மீது தமது

பொற்பாதங்கள் பட நடந்து அலைந்து திரிந்தாரே. அந்த அவதார நோக்கமே ஜனங்கள் மீட்படைய வேண்டும், முக்திக்கு வழியை தெரிந்து கொள்ள வேண்டும், அதற்கு எப்படி வாழ வேண்டும் என்பதை தானே வாழ்ந்துகாட்டி உணர்த்துவதற்குத்தானே.

உண்மையிலேயே நோவா காலத்தில் உலகமெங்கும் மழை பெய்து பெரு வெள்ளம் வந்ததா?

இந்த உலகம் உருவாக்கப்பட்ட பின்பு நடந்த மிக முக்கியமான சம்பவங்களில் ஒன்று நோவா காலத்தில் உலகமெங்கும் ஏற்பட்ட பெருவெள்ளமாகும். ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களோ நோவா காலத்தில் உலகம் முழுவதும் மழை பெய்ததாக திருமறை கூறியதை ஏற்றுக் கொள்ளாமல், அது மெசபடோமியா பகுதியில் மாத்திரம்தான் ஏற்பட்டு இருக்கவேண்டும் என்று சொல்லி வந்தனர்.

இதில் கொடுமை என்னவென்றால் பரிசுத்த வேதாகமத்தை ஆவியானவரின் துணையோடு முழுமையாக படிக்காத சில போதகர்களும் இந்த விஞ்ஞானிகள் சொன்னதை நம்பியதுதான். மனிதர்கள் கூறுவது மாறிப்போகும். ஆனால் ஆண்டவரின் வார்த்தை ஒருபோதும் மாறாதே. 'வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், ஆண்டவருடைய வார்த்தை ஒழியாது' என வேதம் கூறுகிறதே. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் மத் 24 : 37ல் 'நோவா காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்' என்று சொல்லியிருக்கிறாரே. இயேசு கிறிஸ்து சொன்னது தவறாகப்போகுமா?

நன்கு படித்த விஞ்ஞானிகளுக்கு இவைகள் ஏன் புரிவதில்லை? இதற்கும் வேதம் பதில் கூறுகிறது. 'ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக் குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவை களானதால், அவைகளை அறியவும் மாட்டான்' என்று கொரி 2:14 கூறுகிறதே.

நோவா காலத்து சம்பவங்கள் எல்லாம் வெறும் கற்பனை என்றால் இயேசு கிறிஸ்து இப்படி கூறியிருக்கமாட்டாரே. 'நோவா காலத்தில்

நடந்தது போல....' என்றார். அப்படி அப்போது என்ன நடந்தது? எங்கு பார்த்தாலும் அப்போது அக்கிரமம், அநீதி விபச்சாரம், வேசித்தனம், அதன் பலனாக அழிவு. இன்றைக்கு உலகமெங்கும் என்ன நடந்து கொண்டு இருக்கிறது? அக்கிரமம், அநியாயம், கொலை, கொள்ளை, தீவிரவாதம், லஞ்சம், அநீதி, நிர்வாகச் சீர்கேடுகள் என்று உலகமெங்கும் நடந்து கொண்டு இருக்கிறதே. அதன் பலன் என்ன? அழிவுதானே? ஆம், அழிவை நோக்கித்தான் இந்த உலகம் இன்று சென்று கொண்டு இருக்கிறது.

அன்றைய உலகின் அழிவுக்கு அன்றைய மக்களின் அக்கிரமமே காரணம்

நோவா காலத்தில் வாழ்ந்த மக்களைக் குறித்து திருமறை கூறும்போது, 'மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவு களின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு', (ஆதி 6 : 5) 'நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகளையும் அழித்தொழிப்போம்' என்றார் - ஆதி 6:7.

அன்றைய மனிதர்கள் பெரும் இராட்சதர்களாக இருந்தனர். காரணம் தேவகுமாரர் என்று சொல்லப்படும் கெட்டுப்போன தேவ தூதர்களின் அசுத்த ஆவிகள் மனித உடலில் புகுந்து இன விருத்தியை செய்யத் துவங்கியது (ஆதி 6 : 1 - 4). ஆகவே மக்கள் விபச்சார மயக்கத்திலும், வேசித்தனத்திலும், காம விகார வேட்கையிலும் அலைந்து திரிந்தனர்.

இன்றைக்கும் இதே விபச்சார மயக்கத்திலும், காம விகார வேட்கையிலும் தானே இந்த உலகமே முழுகி அதன் விளைவாக சிறு குழந்தைகளையும் பாலியல் குற்றங்களுக்கு பயன்படுத்தி, கற்பழிப்பு, திருமணத்திற்கு முன்பே கருவுறுதல், கருக்கலைப்பு, கொலை, கொள்ளையும் அனுதினமும் பேப்பர்களிலும், மேகசீன்களிலும், டி.வி., ரேடியோ நியூஸ்களிலும் எங்கு பார்த்தாலும் தேவ பயமற்ற அக்கிரமச் செயல்கள் பூமியில் பெருகி யுள்ளதை காண்கிறோமே. இதற்கெல்லாம் காரணம் என்ன?

இன்றைக்கு என்றுமில்லாத அளவுக்கு மனித சரீரங்களில் வேசித்தன ஆவி (ஓசியா 4 : 12, 5 : 4), கொலை பாதக ஆவிகள் (யோ 8 : 44), தாறுமாறுகளின் ஆவி (ஏசாயா 19 : 14), குற்றம் சாட்டும் ஆவி (வெளி 12 : 10), பொய்யின் ஆவிகள் மனித உடல்களில் புகுந்து மனித இனமே நாசகரமான பாதையில் செல்லும்படி செய்துவிட்டன. இதன் பலன் என்ன ஆகும்? அழிவுதான்.

அன்றைய நோவாவின் காலத்தில் இந்த உலகம் பெரு வெள்ளத்தால் அழிக்கப்பட்டது. இப்போது இயேசு கிறிஸ்துவின் வருகையின் காலத்திலோ இந்த உலகம் நெருப்பால் அழியும் என்று திருமறை திட்டவட்டமாக கூறுகிறது. அப்பொழுது இருந்த உலகம் ஜலப் பிரளயத்தினாலே அழிந்தது என்பதையும் அறியாமல் இருக்கிறார்கள். ‘இப்போது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தை யினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு தேவ பக்தி யில்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டு இருக்கிறது’. - II பேதுரு 3:6:7

நோவா கட்டிய பேழை (கப்பல்)

உலக மக்கள் அனைவரும் அக்கிரமத்திலும் அநியாயத்திலும் மூழ்கி இருந்தனர். ஆனால் நோவாவோ அந்த மக்களின் மத்தியில் ஒரு நீதிமானாய் வாழ்ந்தான் (ஆதி 6 : 9). ஜலப் பிரளயத்தால் இந்த உலகை அழித்து புதிய மனித வம்சத்தை உண்டாக்க சித்தம் கொண்ட தேவன் நோவாவையும், அவன் குடும்பத்தாரையும் மட்டும் தப்புவிக்க பேழை ஒன்றை கட்டும்படி கட்டளையிட்டார் (ஆதி 6 : 14). நோவாவின் காலத்தில் உலகமெங்கும் ஜலப்பிரளயம் வரவில்லை. அது நோவா இருந்த பகுதியில் மட்டும்தான் வந்தது என்று சொல்லி வந்த ஆராய்ச்சியாளர்கள் இங்கு ஒன்றை சிந்திக்க துவங்கினர்.

நோவா இருந்த இடத்தில் மாத்திரம் ஜலப்பிரளயம் வந்திருக்குமேயானால் தேவன் நோவாவை பார்த்து வேறு ஒரு இடத்துக்குப் போ என்று லோத்துவிடம் கூறியதைப் போல சொல்லியிருப்பாரே. கப்பல் கட்டும்படி சொல்ல வேண்டிய அவசியம் என்ன? இந்த கேள்வி ஆராய்ச்சியாளர்களுக்கு சம்மட்டியாய் இருந்தது. ‘ஞானிகளை வெட்கப்படுத்தும் படி தேவன் உலகத்தில்

பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்' என்று 1 கொரி 1:27ல்வேதம்கூறுகிறதே.

தேவன் நோவாவை இந்த பேழையை கொப்பேர் மரத்தில் உண்டாக்கும்படி சொல்கிறார். அதன் உள்ளும் புறமும் கீல் (தார்) பூசும்படி சொல்கிறார். பேழையின் நீளம் 300 முழமும், அகலம் 50 முழமும், உயரம் 30 முழமுமாய் இருக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார் (ஆதி 6:14, 22).

இன்றைய அடிக்கணக்கிற்கு வந்தால் பேழையின் நீளம் சரியாய் 437.5 அடியும், அகலம் 72.92 அடியும், உயரம் 43.75 அடியுமாக இருந்திருக்கணும். அந்தக் காலத்தில் இரண்டு விதமான முழ அளவுகள் பின்பற்றப்பட்டன. பெரிய முழத்தின் அளவு 20.65 அங்குலமும், சின்ன முழத்தின் அளவு 17.5 அங்குலமுமாக இருந்தன. ஒரு முழம் 17.5 என்கிற கணக்கிலே பார்த்தால் பேழையின் அளவு 437.5 ம், 72.92 ம், 43.75 என்று இருந்திருக்கின்றது. அதன் சதுர அளவு சுமார் 95,700 சதுர அடி. அதாவது சுமார் 25 பேஸ்கட் பால் கோர்ட்டின் அளவை விட பெரியது. பேழையின் கன அளவு 13,96,000 கன அடியாகும். அதோட எடை 13,960 டன் ஆகும்.

நோவாவினுடைய பேழையின் அளவை கணக்கிட்டுப் பார்த்த கப்பல் கட்டும் வல்லுனர்கள் இந்த அளவில் ஒரு கப்பல் கட்டப்பட்டால் அது மிதந்து செல்லாது என கருத்துத் தெரிவித்தனர். உடனே பீட்டர் ஜான்சன் என்ற ஹாலந்து நாட்டைச் சேர்ந்தவர் இந்த அளவிலேயே ஒரு மாதிரிக் கப்பலை உருவாக்கினார். அந்தக் கப்பல் தண்ணீரில் நன்றாக மிதந்து சென்றது. இன்றைய கப்பல்கள் எல்லாம் அதன் நீளமும், அகலமும் 8:1:1 என்கிற விகிதத்தில் இருக்க வேண்டும் என தீர்மாணித்து அப்படியே செய்துவிட்டனர்.

ஆனால் நோவாவின் பேழையின் நீளத்தையும், அகலத்தையும் கணக்கிட்டால் அது 6 : 1 என்கிற விகிதத்தில் இருந்தது. அதனால் நோவாவின் பேழை மிதந்து சென்று இருக்க முடியாது என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்வதற்கு காரணம் இன்றைய கப்பல்கள் 8:1:1 என்கிற விகிதத்தில் கட்டப்படுவதாலேயே அது வேகமாக செல்கிறது. 6:1 என்கிற விகிதத்தில் கட்டப்பட்டால் அது வேகமாக செல்ல

முடியாதே என்று கப்பல் வல்லுனர்கள் வாதம் செய்தனர். இவர்கள் ஒரு விஷயத்தை மறந்துவிட்டனர்.

தேவன் நோவாவைப் பார்த்து பேழையை செய்யும்படி சொன்னது, அது தண்ணீரில் மிதப்பதற்குத்தானே ஒழிய அது வேகமாக மிதந்து சென்று வேறொரு இடத்துக்கு போவதற்காக அல்ல. இதைத்தான் பீட்டர் ஜான்சன் நிரூபித்தார். நோவாவின் பேழையைப் போலவே 6 : 1 விகிதத்தில் ஒரு கப்பலைக் கட்டினார். அது வெற்றிகரமாக மிதந்து சென்றது. அது எளிதில் கவிழ முடியாததாயும் இருந்தது. ஆழமான சமுத்திரத்திலும், அலைகள் அதிகமாக அடிக்கிற சூழ்நிலையிலும் அது மிக அழகாக மிதந்து சென்றது. இவ்வளவு பெரிய பேழையை கட்டும்படி எதற்காக ஆண்டவர் சொன்னார் என்று பார்க்கும் போது அதற்கும் திருமறை பதில் அளிக்கிறது. ‘சகலவிதமான மாம்ச ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகைக்கு ஒவ்வொரு ஜோடியை உன்னோடு உயிரோடு காக்கப்படுவதற்கு பேழைக்குள் சேர்த்துக் கொள்’ - ஆதி 6:19

ஆக அனைத்து இன மிருகங்களிலும் ஒரு ஜோடி வீதமாக பேழையில் காக்கப்படவேண்டும், நீர்வாழ் உயிரினங்கள் தவிர. ஏனென்றால் நீர்வாழ் உயிரினங்கள் தண்ணீரில் வாழ முடியும் என்பதால். பூமியின் மீது 17,600 வகையான மிருக ஜீவன்கள் இருக்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் ஜோடி ஜோடிகள் என்றால் 35000க்கும் மேற்பட்ட மிருகங்கள் அந்த பேழையில் இருந்திருக்க வேண்டும். இந்த மிருகங்கள் எல்லாம் எப்படி ஒன்றோடொன்று சண்டை போடாமல் இருந்திருக்க முடியும் என்கிற கேள்வி நம் உள்ளத்தில் எழுமானால் அதற்கும் சங் 11 : 6, 9 பதில் கூறுகிறது.

‘இயேசுவின் இராஜ்யத்திலே ஓனாய், ஆட்டுக் குட்டியோடு தங்கும். புலி வெள்ளாட்டுக் குட்டியோடு படுத்துக் கொள்ளும். கன்றுக் குட்டியும், பால சிங்கமும், காளையும் ஒன்றாய் இருக்கும். சிங்கம் மாட்டைப் போல வைக்கோல் தின்னும் என்றும், மேலும் என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வார் யாருமில்லை, கேடு செய்வார் யாருமில்லை’ என்று திருமறை கூறுகிறது.

அதேபோலத்தான் அன்று பேழையில் இருந்த அத்தனை மிருகங்களும் தேவனுக்குப் பயந்து அடங்கி இருந்தன. ஆனால் இன்றைக்கு மனிதனோ சபையிலும், சமூகத்திலும் இப்படி அடங்கி வாழக் கற்றுக் கொள்ளாமல் சூது, வாது, கள்ளம், கபடம், வஞ்சக எண்ணங்கள், சுயநலம், பொறாமையினால் பிளவுகளோடும், பிரிவினைகளோடும் வாழ்கிறார்கள். இது எத்தனை பரிதாபம் இல்லையா? நாம் எப்போது தேவனுக்குப் பயந்து கீழ்படிந்து நடக்கிறோமோ அப்போதுதான் நாம் தெய்வ மக்களாக மாற முடியும். நோவா கட்டிய பேழையைப் பார்த்துத்தான் உலகத்தில் கப்பல் கட்டவே மனிதர்கள் கற்றுக்கொண்டார்கள்.

பேழை எவ்வளவு நாட்கள் தண்ணீரில் மிதந்தது?

இவ்வளவு பெரிய பேழை ஆயிரக்கணக்கான மிருகங்கள் தங்குவதற்காக கட்டப்பட்டது. அப்படி என்றால் அது அநேக நாட்களுக்கு தண்ணீரில் மிதக்க வேண்டியது அவசியமாய் இருந்திருக்கும். நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப் பிரயத்தினால்தான் பல பெரிய இயற்கை மாற்றங்கள் பூமியாகிய இக்கிரஹத்தில் நிகழ்ந்துள்ளன. அப்படி என்றால் எத்தன்ன நாட்களுக்கு இந்த பூமியில் அந்த பெருவெள்ளம் இருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

நோவாவிற்கு 600 வயது ஆகும்போது மழை பெய்ய ஆரம்பித்தது. அது இரவும் பகலுமாக 40 நாட்கள் பெய்தது என்று ஆதி 7 : 11, 12 சொல்லுகிறது. மழை பெய்ய ஆரம்பித்து 150 நாட்கள் கழித்துதான் தண்ணீர் வற்ற ஆரம்பித்ததாம் (ஆதி 8 : 3). அதற்குப் பின்பு நோவாவிற்கு 601 வயதாகும் போதுதான் தண்ணீர் முழுவதுமாக வற்றியது என்று ஆதி 8 : 13 கூறுகிறது. ஆக ஒரு வருஷத்துக்கு மேலாக வெள்ளப்பெருக்கு இந்த பூமியின் மேல் இருந்திருக்கு. அப்படி ஒரு வருஷம் முழுக்க இருந்த பெரு வெள்ளத்தில் (அதாவது 13,960 டன் எடையுள்ள ஒரு பேழை மிதக்கக் கூடிய அளவுக்கு ஆழம் அந்த ஜலப் பிரளயத்தினால் ஏற்பட்டு இருக்கிறது) பேழையில் இருந்த நோவாவின் குடும்பத்தாரையும், மிருகங்களையும் தவிர பூமியின் மீதிருந்த அனைத்து மனிதர்களும், சகல மிருகங்களும், எல்லாமுமே அழிக்கப்பட்டது என திருமறை ஆதி 7 : 23 கூறுகிறது.

நோவாவின் காலத்தில் எவ்வளவு ஜனங்கள் இந்த பூமியில் வாழ்ந்தார்கள்?

நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தின் போது உலகம் முழுவதும் மனிதர்கள் இருந்திருக்க வாய்ப்பு இல்லை. நோவா ஆதாமுக்கு 10வது தலைமுறைதானே. அதற்குள் உலகம் முழுவதும் ஜனங்கள் பலுகிப் பெருகி பரவி வாழ்ந்திருக்க முடியுமா? என்பது சிலருடைய கேள்வி. ஆனால் திருமறையோ 'பூமியின் மீதெங்கும் இருந்த மனிதர்கள் எல்லோரும் அழிக்கப் பட்டார்கள்' என்று கூறுகிறது. அப்படி என்றால் அப்போது எவ்வளவு பேர் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்? நோவாவின் காலம்வரை வாழ்ந்த மனிதர்களின் சராசரி ஆயுட்காலம் 921 ஆகும்.

அக்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் சுமார் 65 வயதிலிருந்து 600 வயதுவரை பிள்ளைகளைப் பெற்றெடுக்கக்கூடியவர்களாக இருந்தார்கள் என்று திருமறையிலிருந்து அறியலாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு சந்ததி தோன்றுவதற்கு சுமார் 90 ஆண்டுகள் ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆதாமிலிருந்து நோவாவின் ஜலப்பிரளயம் வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலம் சுமார் 1656 ஆண்டுகள். இந்த இடைவெளியில் 18 சந்ததிகள் உருவாகி இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட சந்ததிக்குப் பிறகு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களின் எண்ணிக்கையை கணக்கிட பயன்படுத்துகிற சூத்திரம் 2 (3) X. இதிலே X என்பது சந்ததியின் எண்ணிக்கையை குறிக்கிறது. அதாவது முதல் சந்ததியின் முடிவில் $2\,(3)^1 = 6$ பேரும், இரண்டாவது சந்ததியில் $2\,(3)^2 = 18$ பேரும் இருந்திருக்க வேண்டும். 18வது சந்ததியின் முடிவில்தான் ஜலப் பிரளயம் ஏற்பட்டது என்றால், இதற்கு முன்னதாய் தோன்றிய சந்ததி களில் ஒரே ஒரு சந்ததியின் மக்கள்தான் அப்போது இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்று மாத்திரம் வைத்துக் கணக்கிட்டால், ஜலப்பிரளயம் ஏற்பட்டபோது சுமார் 1030 மில்லியன் மக்கள் இந்த உலகில் இருந்திருக்க முடியும் என்று கணக்கிடப்படுகிறது.

1030 மில்லியன் மக்கள் இருந்திருக்கும்போது அவர்கள் உலகம் முழுக்க பரவி இருந்து வாழ்ந்திருக்க வேண்டும். எனவேதான் உலகம் முழுவதையும் மூழ்கடிக்கக்கூடிய ஜலப் பிரளயத்தை தேவனாகிய கர்த்தர் அனுமதித்தார்.

அன்றைய மக்களுக்கு மனந்திரும்பும் நற்செய்தி சொல்லப்பட்டதா?

நோவாவின் காலத்தில் உலக முழுவதும் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் நோவாவோடு சேர்த்து மொத்தமே எட்டுப்பேர் மட்டும்தான் பேழையின் மூலமாக தப்புவிக்கப்பட்டனர். மற்ற அனைவருமே அந்தப் பெருவெள்ளத்தில் அழிந்து போயினர் என்று திருமறை கூறுகிறது. இதைப் படிக்கும்போது ஒருவேளை நம்மில் சிலருக்கு சில சந்தேகங்கள் வரலாம். 1030 மில்லியன் மக்களில் எட்டுபேர் மட்டும்தான் மீட்கப்பட்டார்களா? மற்றவர்கள் எல்லாம் அழிந்து போனார்களா? எல்லோருக்கும் மனம் திரும்பும் செய்தி சொல்லப்பட்டதா? அந்த செய்தி உலகம் முழுக்க பரவியிருந்த மக்களுக்குப் போய்ச் சேர வாய்ப்பு இருந்ததா? என்று சில நியாயமான கேள்விகள் நம்மோட உள்ளத்தில் எழலாம். ஆனால் இவை அனைத்திற்கும் வேதத்தில் பதில் இருக்கத்தான் செய்கிறது. 'பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல் நீதியைப் பிரசிங்கித்த வனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவ பக்தி உள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல் ஜலப் பிரளயத்தை வரப்பண்ணினார்' என 2 பேதுரு 2 : 5ல் எழுதப்பட்டு இருக்கிறது. இப்படி அவர் முதல் தடவையாக பண்ண வில்லையே. சோதோம் கொமோரா பட்டிணங்கள் ஜனங்கள் தேவனை மறந்து காமவெறி பிடித்து விபச்சாரமும், வேசித்தனமும் செய்து அக்கிரமங்களில் ஈடுபட்ட போது அந்த பட்டிணங்களையும், அதிலுள்ள ஜனங்கள் அனைவரையும் சாம்பலாக்கியிருக்கிறாரே. தேவன் சுத்தக் கண்ணர். அவரால் அக்கிரமங்களை சகித்துக் கொள்ள முடியாது. 'அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறவர்களை அவர் அழிப்பார்' - 2 பேதுரு 2 : 10.

நோவாவின் காலத்தில் வந்த ஜலப்பிரளயத்திற்குப் பிறகுதான் பாபேல் கோபுரம் கட்டப்பட்டது என திருமறை கூறுகிறது. அப்பொழுது பூமி எங்கும் ஒரே விதமாக பாஷையும், பேச்சும்தான் இருந்தது என்றும், அதற்குப் பிறகே பல பாஷைகள் தோன்றின என்றும் வேதம் கூறுகிறது. - ஆதி 11 : 9. அப்படி என்றால் நோவாவின் நாட்களில் உலகத்தில் ஒரே விதமான பாஷைதான் இருந்தது. அதனால் நோவாவின் எச்சரிப்பு எல்லோருக்கும் சென்றிருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, நோவா பேழையை ஒரு ஆற்றின் கரையிலோ, சமுத்திரத்தின் கரையிலோ கட்டவில்லை. அவ்வளவு பெரிய

பேழையை நோவா கட்டாந்தரையிலேதான் கட்டினான். அவ்வளவு பெரிய பேழையைக் கட்ட எத்தனை கொப்பேர் மரங்கள் தேவைப்பட்டு இருக்கும். அந்த மரங்களை வெட்டி, அவைகளைக் கொண்டு வந்து பலகைகளாக அறுத்து, செதுக்கி, கீல் பூசி, ஆணி அடித்து அவைகளை ஒன்று சேர்த்து அந்த பேழையை செய்திருக்க வேண்டும். பேழையை கட்டிமுடிக்க 120 வருடங்கள் ஆகின. இத்தனை வேலைகளையும் நோவா தனியாக செய்திருக்க முடியாது. மரம் வெட்டி, அவைகளைக் கொண்டு வர, அறுக்க, செதுக்க, அவைகளை பொருத்த பல நூறு தச்சர்கள், கூலியாட்கள் தேவைப்பட்டு இருக்கும். இந்த வேலைகள் அனைத்தும் இரகசியமாக யாருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் நடைபெறவில்லை. ஓப்பனாக அனைவருக்கும் முன்பாக 120 வருஷம் நடக்கின்ற சமயத்தில் ஜனங்கள் இதைப் பார்க்காமல், ஏன் இந்த பேழையைக் கட்டுகிறாய் என்று கேட்காமல் இருந்திருப்பார்களா? கேள்வி மேல் கேள்வி கேட்டு, ஊர் உலகமெங்கும் இதே பேச்சாக இருந்திருக்கும். அதுவரை அவர்களில் யாரும் ஒரு பேழையை பார்த்தது கிடையாது. அதைப் பார்ப்பதற்கும் ஜனங்கள் அனைத்து பகுதிகளில் இருந்தும் கூட்டம் கூட்டமாக வந்திருப்பார்கள். மழையைப் பார்த்தது இல்லை. வானத்திலிருந்து தண்ணீர் எப்படி வரும்? என்றெல்லாம் ஜனங்கள் தங்களுக்குள்ளேயே பரபரப்பாக பேசியிருப்பார்கள். ஆகவே எச்சரிப்பின் செய்தி கண்டிப்பாக அனைவருக்கும் எட்டி இருக்கும். ஆனால் என்ன? நோவா சொன்ன எச்சரிப்பை யாரும் நம்பவில்லை. நோவாவை ஒரு பைத்தியக்காரன் போல எண்ணிப் பார்த்து தங்களுக்குள்ளேயே சிரித்துவிட்டு சென்றிருப்பார்கள்.

உலகம் வெள்ளத்தால் அழியும் அளவுக்கு தண்ணீர் எங்கிருந்து வந்தது?

நோவாவின் காலத்தில் இந்த உலகம் முழுவதும் மழை வெள்ளத்தால் அழிந்தது என்று திருமறை கூறுகிறது. 40 நாட்கள் இரவும் பகலும் மழை பெய்தது. அந்தத் தண்ணீர் பூமி எங்கும் ஒரு வருடத்திற்கும் மேலாக அப்படியே இருந்தது என்றும் முன்பு பார்த்தோம். உலகம் முழுவதையும் அழிக்கும் அளவுக்கு தண்ணீர் எங்கிருந்து வந்தது? அது எவ்வளவு உயரத்திற்கு பூமியின் மீது இருந்தது எனவும் பார்ப்போம்.

அந்த காலத்திலே இந்த உலகத்திலே 50 அடி, 60 அடி உயரம் கொண்ட ராட்சத மிருகங்கள் இருந்தன என்று சரித்திர வரலாற்று

ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஜலப் பிரளயத்தில் இந்த உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் அழிந்தன என்றால் இந்த ராட்சத மிருகங்களும் அந்த வெள்ளத்தில் அழிந்திருக்க வேண்டும். அப்படி என்றால் இந்த பூமியின் மீது எவ்வளவு உயரத்திற்கு தண்ணீர் நின்றது என்று திருமறையில் நாம் பார்க்க வேண்டும். ஆதி 7 : 19, 20 வசனங்களில் 'தண்ணீர் பூமியின் மேல் மிகவும் அதிகமாகப் பெருகினதால், பூமியின் மேல் இருந்த உயர்ந்த மலைகளை விட 15 முழ உயரத்திற்கு தண்ணீர் நின்றது' என்று கூறப்பட்டு இருக்கிறது. 15 முழம் என்பது சுமார் 22½ அடியாகும்.

இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 5 மைல் ஆகும். அராரத் மலையின் உயரம் 3 மைல்களாகும். இந்த மலைகளுக்கு மேலே 22½ அடி உயரத்திற்கு தண்ணீர் நின்றது என்றால் பூமியின் மீது இருந்த அத்தனை உயிர்களும் ஒரே நாளில் மூழ்கி அழிந்திருக்கும் அல்லவா? அடுத்த கேள்வி, இவ்வளவு தண்ணீர் எங்கேயிருந்து வந்தது என்பதாகும். வானத்தில் உள்ள எல்லா மேகங்களும் ஒன்று சேர்ந்து முழுவதுமாக மழையாகப் பொழிந்தாலும் அது பூமியின் மேல் 2 அங்குலத்திற்கும் குறைவாகத்தான் இருந்திருக்க முடியும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

இந்த உலகத்தின் உயரமான மலை உச்சிகளுக்கும் மேலாக 22½ அடி தண்ணீர் நிற்க வேண்டுமானால், அவ்வளவு தண்ணீர் எங்கேயிருந்து வந்தது என்று அறிந்து கொள்ள இந்த உலகம் எப்படி முதலில் படைக்கப்பட்டது என்பதை வேதத்தில் பார்த்தோமானால் இதற்குரிய விடையை அதில் காண முடியும். ஆதி 1 : 6, 7ஐப் படியுங்கள். 'கடவுள் நீர்திரளின் நடுவில் வானவெளி உண்டாகி நீரினின்று நீர் பிரியக்கடவது' என்றார். இவ்வாறு கடவுள் வானவெளியை உண்டாக்கி வானவெளிக்கு கீழேயுள்ள நீரையும், வானவெளிக்கு மேலேயுள்ள நீரையும் பிரித்தார். இந்தப் பிரிவை ஜலத்திரை (Water Canopy) என்று அழைக்கின்றனர். இது பல மைல்கள் கனமுள்ளதாக இருந்திருக்கின்றது. இதில் உள்ள தண்ணீர் நீராவியான நிலமையில் இருந்திருக்கிறது. ஆகாய விரிவுக்கு மேலே அவ்வளவு உயரத்தில், அங்கே உள்ள வெப்பத்தில் அது நீராவியாகத்தான் இருந்திருக்க முடியும். இந்த நீர்த்திரை திடீரென்று ஏற்பட்ட இயற்கைக் கோளாறினால் உடைய, அது நோவாவின் காலத்தில் பெருமழை வெள்ளமாக பொழிந்திருக்கிறது.

இந்த நீர்த்திரை வானத்தை மறைத்து பூமியை சுற்றி இருக்கிறது. இந்த நீர்த்தரையில் உடைப்பு ஏற்பட்டு வானம் திறந்ததைத்தான் திருமறை 'வானத்தின் மதகுகளும் திறக்கப்பட்டன' என்று ஆதி 7 : 11 கூறுகிறது.

பூமியை சுற்றி நீர்த்திரை இருந்ததா ?

இந்த பூமியைச் சுற்றி நீர்த்திரை இருந்ததற்கு அநேக ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இன்றைக்கு இந்த பூமியின் மீது மாறி மாறி வரும் பருவ காலங்கள் நோவாவின் காலத்திற்கு முன்பு இருந்தது இல்லை. ஒரே விதமான நல்ல சீதோஷ்ண நிலைதான் இருந்தது, அதிக வெப்பமில்லாத ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையே இருந்தது. இதனால்தான் நோவாவின் காலத்திற்கு முன் வாழ்ந்தவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்திருக்கிறார்கள். மிருகங்களும் உருவத்தில் மிகவும் பெரியனவாக இருந்தன.

இன்றைய மனிதனின் ஆயுசுக்காலம் குறைந்து கொண்டே போவதற்கு முக்கிய காரணம் சூரியனிலிருந்து வெளியாகும் X-rays, Ultra Violet Rays போன்ற மனித உடலுக்கு தீங்கிழைக்கும் கதிர்கள் பூமியின் மேல் நேரடியாக விழுவதே. முன்பு Water Canopy என்கிற நீர்த்திரை பூமியைச் சுற்றி பாதுகாப்பாக இருந்ததால் நோவாவின் காலத்தில் இந்தக் கதிர்கள் பூமியில் மனிதர்கள் மேல் விழவில்லை. இதனால் நோவாவின் காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருந்தனர். நோவாவின் ஆயுசுக்காலம் 950 ஆண்டுகள். ஆபிரகாமின் ஆயுசுக்காலம் 175 ஆண்டுகள். இன்றைய மனிதனின் சராசரி ஆயுசுக் காலம் 43 வருஷங்களே. எவ்வளவு பெரிய வித்தியாசம் பாருங்கள்.

நீர்த்திரைகள் உடைந்ததினால் சூரியனிலிருந்து வெளிவரும் X-rays, Ultra Violet Rays மற்றும் பிற தீங்கிழைக்கும் கதிர்கள் மனிதர்கள் விழுவதே இந்த ஆயுள் குறைவுக்குக் காரணம். சூரியக் கதிர்கள் மனிதர்கள் மேல் நேரடியாக விழுவதினால் மனிதனுக்கு புற்று நோய்களும், தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளும், மற்றும் குழந்தைகளுக்கான நோய்களும் தோன்றுகின்றன. பல குழந்தைகள் பிறவியிலேயே ஊனமாக பிறப்பதற்கும் இதுவே காரணம்.

ஜலப் பிரளயத்துக்கு முன்பு நோவா திராட்சை ரசம் குடித்திருக்கிறான். அந்தப்படியே பெரு வெள்ளத்திற்குப் பிறகும் திராட்சை ரசத்தை நோவா

குடிக்கும்போது அது அவனுக்கு மயக்கத்தை கொடுத்தது என ஆதி 9 : 21ல் பார்க்கிறோம். அதற்குக் காரணம் சூரிய கதிர்கள் நேரடியாக பூமியின் மீது விழுந்ததால் ஏற்பட்ட வெப்பத்தால், இயற்கை மாற்றத்தால் திராட்சை ரசம் புளித்துப் போனதே. இறைவன் உலகை உண்டாக்கிய போது காய்கறி, கீரை, பழங்களை சாப்பிட்டு வந்த மனித இனம் பெரு வெள்ளத்திற்குப் பிறகு சூழ்நிலைக்கு ஏற்ப மிருக மாமிசம் சாப்பிட ஆரம்பித்தார்கள். (ஆதி 9 : 2, 3). இத்தனை மாறுதல்களும் நீர்த்திரை உடைந்து பெருவெள்ளமாக இந்த பூமியின் மீது விழுந்த பின்புதான் நடந்திருக்கிறது.

வானவில் எப்படி தோன்றியது ?

இந்த பூமியைச் சுற்றியிருந்த நீர்த்திரைகள் உடைந்து விழுந்ததின் இன்னொரு அடையாளம்தான் நாம் இன்று மழைக் காலங்களில் பார்க்கின்ற வானவில். ஆகாயத்திலுள்ள மழைத்துளிகளின் வழியாய் ஒளி ஊடுருவிச் செல்ல ஒளிச்சிதறல் ஏற்படுவதினால் வானவில் உண்டாகிறது. ஆனால் நோவாவின் காலத்தில் வந்த ஜலப் பிரளயத்திற்கு முன்பு இந்த பூமியில் மழை பெய்தது இல்லை. ஆதாம் காலம் தொட்டு நோவாவின் காலம் வரை இந்த பூமியை பனிதான் நனைத்ததே தவிர மழை பெய்தது இல்லை (ஆதி 2 : 4, 5). நோவாவின் காலத்தில் வந்த பெருவெள்ளத்திற்கு காரணமான மழைதான் இந்த பூமியில் பெய்த முதல் மழையாகும். அதற்குப் பிறகு பூமியின் கால சூழ்நிலைகள் மாற, சூழ்நிலைக்கு தக்கவாறு ஆங்காங்கே மழை பெய்யத் துவங்கியது. ஆகவே நோவா காலத்திற்கு முன்பு மழை பெய்யவில்லை. ஆகையால் வானத்தில் வானவில்லும் உண்டாக வாய்ப்பில்லை.

நீர்த்திரைகள் இந்த பூமியைச் சுற்றி இருந்தபடியால் அதன் வழியாக சூரிய ஒளி கசிந்திருக்குமே ஒழிய சூரிய ஒளிச் சிதறல் ஏற்பட வாய்ப்பில்லை. வானத்திலிருந்த நீர்த்திரைகள் எப்போது உடைந்து பூமியின் மேல் விழுந்ததோ அதன் பிறகே ஆகாயத்தில் மழைத் துளிகள் விழ, அதன் பலனாக வானவில் வானத்தில் தோன்ற ஆரம்பித்தது. ஆதி 9 : 13 – 17ல் 'இந்த பூமியை மழை வெள்ளத்தால் அழித்தேன். இனி மழை வெள்ளத்தால் இந்த பூமியை அழிக்கமாட்டேன் என்பதற்கு அடையாளமாக வானவில்லை வானத்தில் வைக்கிறேன். இது என்றென்றும் நான் உங்களோடு செய்கிற உடன்படிக்கை' என்று ஆண்டவர் சொன்னார்.

அப்படி என்றால் நோவாவின் காலத்து வெள்ளத்திற்குப் பிறகுதான் வானவில் வானத்தில் தோன்றியது என்று உறுதியாக நம்ப முடிகிறது.

பூமி சாய்வாக சுற்றுவதின் காரணம் என்ன ?

நோவா காலத்து வெள்ளத்திற்குப் பின்புதான் இந்த பூமியில் பருவ காலங்கள் தோன்ற ஆரம்பித்தன. 'பூமி உள்ள நாளளவும், விதைப்பும், அறுப்பும், சீதளமும், உஷ்ணமும், கோடை காலமும், மழைக் காலமும், இரவும், பகலும் ஒழிவதில்லை' என்று தேவன் ஆதி 8 : 22ல் சொன்னார். பூமியைச் சுற்றியிருந்த நீர்த்திரை (வானத்தின் மதகுகள்) நோவாவின் காலத்தில் உடைந்து பூமியின் மீது விழுந்ததினாலும், அப்பொழுது இந்த பூமியில் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும்தான் இந்த பூமி இப்போது 23½ டிகிரி சாய்வாக சுற்றுவதற்கு காரணமாயிற்று. இந்த பூமி எப்பொழுது 23½ டிகிரி சாய்வாக சுற்ற ஆரம்பிச்சதோ, அப்பொழுதிலிருந்துதான் இந்த பூமியில் பருவ காலங்கள் துவங்கி இருக்கிறது. இதைக் குறித்த வார்த்தை யோபுவின் புத்தகத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.

'இதோ அவர் தண்ணீர்களை அடக்கினால் எல்லாம் உலர்ந்துபோம். அவர் அவைகளை வரவிட்டால், பூமியைக் கீழது மேல் தாக்கும்' - யோபு 12 : 15.

நோவா காலத்தில் பெய்த மழைத் தண்ணீர் இப்போது எங்கே?

ஆகாயத்தில் இந்த பூமியை சுற்றியிருந்த நீர்திரைகள் உடைந்து விழுந்து பெருவெள்ளமாகி அந்த தண்ணீர் உலகிலே உயர்ந்த மலைகளைவிட உயரமாக நின்றது. வெள்ளம் வற்றிய பிறகு அவ்வளவு தண்ணீரும் எங்கே சென்றிருக்க முடியும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது அவைகள் கடலில் போய் சேர்ந்திருப்பதைக் கண்டுபிடித்தனர்.

நோவாவின் வெள்ளத்திற்கு முன்பு சமுத்திரம் இப்பொழுது இருப்பது போல அவ்வளவு ஆழமாக இருந்தது இல்லை. நீர்த்திரைகள் இந்த பூமியின் மீது உடைந்து விழுந்ததினாலும், பூமியில் அப்போது ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் கடல் மிகவும் ஆழமாக மாறியிருக்கிறது. கடல் ஆராய்ச்சியிலே கடலில் இரண்டு தட்டுகள் இருப்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அதிக ஆழம் இல்லாத கரையருகே உள்ள தட்டு நோவாவின் காலத்திற்கு முட்பட்டதாகும். அந்தத் தட்டிலிருந்து கடல் திடீரென்று மிகவும் ஆழமாகிச் செல்லுகிறது. இது நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஆழங்களே. இந்தக் கடல் ஆழத்தில்தான் பெரு வெள்ளத்தின் தண்ணீர் கலந்து நிற்கிறது. அப்படி என்றால் சமுத்திரத்தில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்று சிலர் அறிய நினைக்கலாம். இந்த பூமி எவ்வித மேடு பள்ளங்கள் எதுவும் இல்லாமல் ஒரே சரிசமமாக, சம பூமியாக இருந்தால் இப்போது கடலில் இருக்கும் தண்ணீர் பூமியின் மேல் இரண்டு மைல்கள் உயரத்திற்கு இருக்கும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

மேலும் நோவாவின் காலத்திற்குப் பின்புதான் உலகில் உள்ள மலைகள் எல்லாம் உயரமாகியது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பெரு வெள்ளத்தில் தண்ணீர் அடித்துக் கொண்டு வந்த மண், பாறைகள், கற்கள் எல்லாம் அப்படியே மலைகளில் படிந்துதான் உலகில் உள்ள மலைகள் எல்லாம் உயரமாக ஆகின என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பாறைப்படிவங்கள் கூறும் உண்மை

உலகமெங்கும் எல்லா தேசங்களிலும் இறந்துபோன உயிரினங்களின் சரீரங்கள் படிவங்களாக கிடைத்துள்ளன. இவைகளை பாறைப் படிவங்கள் (Fossil) என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட கணக்கிலடங்காத மில்லியன் கணக்கான பாறைப் படிவங்கள் உலகமெங்கும் கிடைத்தபடியால் விஞ்ஞானிகள் ஆச்சரியமடைந்தனர். உலகமெங்கும் வெள்ளம் வந்தபடியினால் தான் இந்த மில்லியன் கணக்கான பாறைப் படிவங்கள் உலகமெங்கும் கிடைக்கிறது என்று விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டனர்.

திருமறையில் சொல்லப்பட்டுள்ள நோவாவின் காலத்து பெருவெள்ளம் உண்மை என்று விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டதற்கு இதுவும் ஒரு காரணம். சாதாரண ஒரு சூழ்நிலையில் ஒரு மிருகம் இறக்குமானால் அதன் சரீரம் அழுகிப்போகும். அல்லது மற்ற மிருகங்கள், பறவைகள், புழு போன்றவைகள் இறந்த மிருகத்தின் சடலத்தை தின்றுவிடும்.

இயற்கையாக இந்த உலகத்தில் பாறைப்படிவங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. ஒரு மிருகத்தின் சரீரம் பாறைப் படிவமாக மாற வேண்டும் என்றால் அந்த மிருகம் இறந்தவுடன், அது அழுகிப்போகும் முன்பு அது புதையுண்டு போக வேண்டும். அப்படி புதையுண்டு போகும்போது ஒரு குளிர்ந்த சூழ்நிலை இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது பாறைப்படிவமாக மாறமுடியும். இப்படிப்பட்ட சூழ்நிலை நோவாவின் காலத்தில் வெள்ளத்தின்போது தான் ஏற்பட்டு இருக்க முடியும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

எப்போதும் உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் பாறைப் படிவங்கள் உருவாவதில்லை. ஏற்கனவே உண்டான பாறைப் படிவங்களைத்தான் இப்பொழுது ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து வருகிறார்கள். மேலும் ஒரு மீன் நீரில் மிதக்கும்போது தானாகவே இறந்துபோனால், அது நீரின் அடிமட்டத்திற்கு செல்லும்போது அதனுடைய துடுப்புகள் எனப்படும் Fins சுருங்கிய நிலையிலேதான் அவைகள் அமிழ்ந்து போகும்.

உலகமெங்கும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல இலட்சக் கணக்கான மீன்களின் பாறைப் படிவங்களில் அவற்றின் துடுப்புகள் விரிந்த நிலையிலேயே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த மீன்கள் எல்லாம் கடலில், தண்ணீரில் நீந்திக்கொண்டு இருக்கும்போது திடீரென்று வந்த பெருவெள்ளத்தினால் அவைகள் பூமிக்குள் சென்று அப்படியே மண்ணுக்குள் புதையுண்டு போனதால் அவற்றின் துடுப்புகள் விரிந்த நிலையிலேயே இருக்க அவைகள் இறந்து பாறைப்படிவங்களாக மாறியிருக்கின்றன. இவைகள் அனைத்தும் நோவா காலத்தில் வந்த பெரு வெள்ளத்திலே நடந்திருக்கிறது என்று தெளிவாகிறது.

எவரெஸ்ட் மலையில் மீன்கள் எப்படி வந்தது ?

எவரெஸ்ட் மலையிலும், அதன் சிகரத்திலும் மீன்களின் பாறைப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எவரெஸ்ட் மலைகளில் எப்படி மீன்கள் சென்றிருக்க முடியும்? நோவா காலத்தில் வந்த பெருவெள்ளத்தில் இந்த மலைக்கும் மேலே மழைத் தண்ணீர் இருந்ததால், அதன் விளைவுதான் மலையின் மீதும் மீனின் பாறைப் படிவங்கள் அங்கும் கிடைக்கக் காரணமாக இருக்கிறது.

நோவாவின் பேழை இப்போது எங்கே இருக்கிறது ?

நோவாவின் காலத்தில் வந்த பெருவெள்ளத்திற்கு விஞ்ஞான ஆதாரங்கள் மட்டுமல்ல, புதை பொருள் ஆராய்ச்சியும் இப்படிப்பட்ட ஒரு பெரு வெள்ளம் உலகமெங்கும் வந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கூறுகிறது. உலகிலுள்ள 80க்கும் மேற்பட்ட நாடுகளின் வரலாற்றில் நோவா காலத்து வெள்ளத்திற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

லூசியன், பிளேவியஸ், ஜோசிபஸ் போன்ற பிரசித்தி பெற்ற சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூட நோவா காலத்து வெள்ளத்திற்கான குறிப்புகளை எழுதி வைத்திருக்கிறார்கள். நோவாவின் பேழை வெள்ளத்திற்குப் பிறகு அராரத் மலையில் நின்றது என்று திருமறை (ஆதி 8 : 4) கூறுகிறது. பிளேவியஸ் ஜோசிபஸ் தம்முடைய ஆராய்ச்சி நூலாகிய Antiguities of the Jews என்கிற புத்தகத்தில் நோவாவின் பேழை பெரு வெள்ளத்திற்குப் பிறகு Nakichevan என்ற இடத்தில் தங்கினதாக குறிப்பிட்டுள்ளார். Nakichevan என்றால் தங்குமிடம் – Landing Place என்று அர்த்தம். அர்மீனியா வழியாக மார்க்கபோலோ சென்றபோது நோவா காலத்து வெள்ளத்திற்கான தகவல்களை கேட்டறிந்து அவைகளை எழுதி வைத்துள்ளார்.

பெரோஸ் என்கிற ஆராய்ச்சியாளர் ஜனங்கள் அராரத் மலைக்குப் போய் அங்குள்ள நோவாவின் பேழையிலிருந்து கீல், மரத்துண்டு போன்ற பல பொருட்களை எடுத்துக் கொண்டு வந்து வியாதியிலிருந்து சுகம் பெறுவதற்காக மக்கள் அவர்களின் உடம்பில் கட்டிக்கொண்டார்கள் என்று எழுதி வைத்திருக்கிறார்.

கிரீஸ் நாட்டில் பிர்ஜியா என்கிற இடத்தில் கிரேக்க நாணயம் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் கப்பல் ஒன்றின் மேல் புறா ஒன்று ஒலிவ இலையை வாயில் கொத்திக்கொண்டு இருப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நோவா காலத்து பெருவெள்ளத்திற்கான நம்பிக்கை கிரேக்கர்களின் காலத்திலேயே இருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. 1883ம் ஆண்டு துருக்கிய ஆராய்ச்சியாளர்கள் நோவாவின் பேழையை அராரத் மலையில் கண்டதாக சொன்னார்கள். இதைத் தொடர்ந்து பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் அங்கு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அராரத் மலையில் நோவாவின் பேழை இருப்பது உண்மையே என்று தகவல் கொடுத்துள்ளார்கள்.

1882ம் ஆண்டு பிரிட்டிஷ் மியூசியத்தைச் சேர்ந்த ஸ்மித் என்கிற ஆராய்ச்சியாளர் நினிவே நகரத்தை ஆராய்ச்சி செய்தபோது நோவாவின் பெரு வெள்ளத்தைக் குறித்த தகவல்கள் அடங்கிய கல்வெட்டுக்களை கண்டுபிடித்தார். இந்த கல்வெட்டுகள் Gil Gamesh Eac என்றழைக்கப் படுகிறது. 1995ம் ஆண்டு Ferraand Navara என்ற இரண்டு பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அராரத் மலையிலே நோவாவின் பேழையைக் கண்டு அதிலிருந்து ஒரு மரத்துண்டைக் கொண்டு வந்தனர்.

அராரத் மலை தற்போது ஒரு பனி படர்ந்த மலையாகும். அந்த மலையிலிருந்து கொண்டுவரப்பட்ட அந்த மரத்துண்டை பரிசோதித்துப் பார்த்தபோது அது கீல் பூசப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அந்த மரத்துண்டு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று Bordeaux பல்கலைக்கழகம் தெரிவித்தது. அராரத் மலை துருக்கி தேசத்திற்கு சொந்தமானதாக இருக்கிறது. ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் இடையில் இந்த மலை இருக்கிறது. அமெரிக்காவைச் சேர்ந்த Institute of Creation Research என்கிற ஸ்தாபனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் துருக்கி அரசாங்க அனுமதியுடன் இங்கு ஆராய்ச்சி செய்தனர்.

அராரத் மலை பனியால் மூடப்பட்டு இருக்கிற படியால் பனிகளுக்குக் கீழே பேழை பத்திரமாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அராரத் மலை இந்த உலகத்தின் மையப் பகுதியில் அமைந்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பேழையில் இருந்த மிருகங்கள் எல்லாம் உலகின் பல பாகங்களுக்கும் பரவிச் செல்வதற்காகத்தான் ஆண்டவர் பேழையை அராரத் மலையில் தங்க வைத்திருக்கலாம் என்று நம்மால் யூகிக்க முடிகிறது.

நோவாவும் அவன் குடும்பத்தாரும் தேவனின் பார்வையில் உண்மையோடு, உத்தமத்தோடு, நீதியோடு, நேர்மையோடு நடந்து கொண்டார்கள். தேவன் அவர்களை மாத்திரம் இந்த உலகத்தின் அழிவிலிருந்தும், நாச மோசங்களிலிருந்தும், கஷ்ட நஷ்டங்களி லிருந்தும் காப்பாற்றிவிட்டார். நோவாவும் அதுவரை மழையைப் பார்த்தது இல்லை. வெள்ளத்தை பார்த்தது இல்லை. ஆனாலும் அவன் தேவனை விசுவாசித்து, அவர் சொன்னபடியே பேழையை உருவாக்கி, எல்லா மிருகங்களையும் ஜோடி ஜோடியாக அழைத்து வந்து பேழையில் பாதுகாப்பாக வைத்தார். அவ்வளவு பெரிய கப்பலைக் கட்டுவதோ (120

வருஷங்கள்), அத்தனை மிருகங் களையும் ஒன்று சேர்ப்பதோ, இவன் குடும்பத்தாருக்கும், அத்தனை மிருகங்களுக்கும் தீவனம் சேகரித்து சேமிப்பது என்பதை எல்லாம் நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. ஆனால் ஒரு கேள்வி கேட்காமல் ஆண்டவரின் வார்த்தைகளுக்கு நோவா கீழ் படிந்தான்.

அதனாலே என்ன ஆயிற்று? 'விசுவாசத்தினாலே கண்ணுக்கு மறைவாயிருந்ததைக் குறித்து நோவா இறைவனால் எச்சரிக்கப்பட்ட போது தம் குடும்பத்தைக் காப்பாற்ற பயபக்தியோடு பேழையை அமைத்தார். அதே விசுவாசத்தினால் உலகைக் கண்டனம் செய்து, விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவராகும் பேற்றுக்கு உரிமையாளர் ஆனார்' என்று வேதம் எபி 11 : 7ல் நோவாவை போற்றிப் புகழ்கிறது.

பெட்ரோல் எப்படி உருவானது ?

இன்றைக்கு உலகமெங்கும் உள்ள அனைத்துத் தர மக்களுக்கும் மிகமிக அத்தியாவசிய தேவையாக இருப்பது பெட்ரோல், டீசல், கேஸ். இவைகள் இல்லை என்றால் உலகமே ஸ்தம்பித்துவிடும். அந்த நிலைமையை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. உலகம் முழுவதும் உள்ள வாகனங்களும், தொழிற்சாலைகளும், ரயில், விமானப் போக்குவரத்து எதையுமே இயக்க முடியாமல் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுவிடும். அந்த அளவுக்கு அத்தியாவசியமாக இருக்கிறது பெட்ரோலும் டீசலும். இந்த பெட்ரோலும் டீசலும் எப்படிக் கிடைக்கிறது? பெட்ரோலும் டீசலும் எப்படி எதனால் உருவாச்சு என்று தெரிய வேண்டாமா? பூமிக்கு அடியில், கடலுக்கு அடியில் கிடைக்கிறது என்று நமக்கு தெரியும். ஆனால் பூமிக்கு அடியில் அது எப்படி உருவாச்சு என்று தெரிய வேண்டாமா?

உலகில் முதன்முதலாக 1859ல் தான் இந்த எண்ணெய் உற்பத்தி ஆரம்பமாகியது. இலாரென்டைன் டிரேக் என்பவர்தான் முதன்முதலாக அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள டைட்டஸ்வில் என்கிற இடத்தில் எண்ணெய்க் கிணறை கண்டுபிடித்தார். உலகமெங்கும் இன்றைக்கு 7,50,000க்கும் மேற்பட்ட எண்ணெய் கிணறுகள் இருக்கின்றன. வருஷத்திற்கு 2000 மில்லியன் டன் எடையுள்ள எண்ணெயை எடுக்கிறார்கள். உலகமெங்கும் இந்த அளவுக்கு எண்ணெய்

கிடைக்கிறது என்றால் அது மிகவும் ஆச்சரியம் இல்லையா? இந்த அளவுக்கு கிடைக்க காரணம் என்ன என்று இப்போது நாம் பார்ப்போம்.

நோவாவின் காலத்தில் வந்த பெரு வெள்ளத்தில் இந்த பூமியில் மில்லியன் கணக்கில் இருந்த ராட்சத மிருகங்கள் அந்த வெள்ளத்தில் இறந்து, அவைகளின் உடல்கள் பூமியின் அடி ஆழத்தில் புதையுண்டுபோய் அங்கே உள்ள வெப்பத்தால் அப்படியே உருகி அதுவே பின்னாளில் பெட்ரோலாக, எண்ணெயாக மாறியுள்ளது. இதைப் பாறைப் படிவங்களின் எண்ணெய் (Fossil Fuel) என்று கூறுவார்கள். இந்தப் பெட்ரோல் உருவாகி 35 மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்று முன்பு விஞ்ஞானிகள் கருதினர். ஆனால் 25 மில்லியன் வருஷங்களுக்கு முன்னால் பெட்ரோலிய கிணறுகளில் பெட்ரோலியம் இருந்திருக்குமானால் 'திரவத்தின் கசியும் தன்மையின்படி' (Law of Permeability), இந்தக் கிணறுகள் எல்லாம் காலியாக இருக்க வேண்டும். ஆனால் பெட்ரோலிய கிணறுகளில் இன்றைக்கும் பெட்ரோல் கிடைப்பதினால் பெட்ரோலியம் உருவாகி 25 மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்க வாய்ப்பு இல்லை என்று பின்பு விஞ்ஞானிகள் கண்டு கொண்டனர்.

மேலும் பெட்ரோல் உருவாகி 25 மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றால் பெட்ரோல் கிணறுகளில் பெட்ரோல் அதிக அழுத்தத்தில் இருக்க முடியாது. ஆனால் இன்றோ பெட்ரோல் கிணறுகளில் பெட்ரோல் அதிக அழுத்தத்தில் கிடைக்கிறது. அப்படி என்றால் அது உருவாகி 25 மில்லியன் வருஷங்கள் ஆகி இருக்க முடியாது. சில ஆயிரம் ஆண்டுகளேதான் ஆகியிருக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டு கொண்டனர். மேலும் பெட்ரோல் இவ்வுலகில் மறுபடியும் மறுபடியும் உருவாக்கப்படுகிறதில்லை. ஒரே ஒரு முறை உருவாக்கப்பட்ட பெட்ரோலைத்தான் நாம் இப்போது பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். பெட்ரோல் அதிகமாகக் கிடைக்கிற அரபு நாடுகளில் கூட இன்னும் சில ஆண்டுகளில் அவைகள் காலியாகிவிடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சாதகமான சூழ்நிலையிருந்தால் குறுகிய காலத்திலும் பெட்ரோலை உருவாக்கிட முடியும் என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். மட்கிப்போன மிருகங்களின் உரத்தை ஒரு சதுர அங்குலத்திற்கு 2000 முதல் 5000 பவுண்டு என்கிற அழுத்தத்தில்

கார்பன்டை ஆக்சைடு, நீராவி இவற்றின் முன்னிலையில் 20 நிமிஷத்திற்கு 726 டிகிரி பாரன்ஹீட் வெப்ப நிலைக்கு உஷ்ணப்படுத்தினால் அது 20 நிமிஷத்தில் பெட்ரோலோக மாறிவிடுகிறது என விஞ்ஞான ஆராய்ச்சியில் தெரிந்து கொண்டனர்.

இதனால் பெட்ரோல் ஒரு குறுகிய காலத்தில்தான் உருவாகி இருக்க முடியும் என்று விஞ்ஞான உலகம் அறிந்து கொண்டது. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தான் கோடிக்கணக்கான மிருகங்கள் பூமிக்கு அடியிலே அமிழ்த்தப்பட்டு பூமியில் புதையுண்டு போயிருக்க வேண்டும். புதையுண்டதினால் பூமியின் ஆழத்தில் இருந்த வெப்பதினாலும் அழுத்தத்தினாலும் அவைகள் பெட்ரோலாக மாறியிருக்கிறது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மிருகங்கள் இறந்து மட்கி பாறைப் படிவங்களாக மாற வேண்டுமானால் அது நோவாவின் காலத்துப் பெரு வெள்ளத்தைத் தவிர வேறெப்போதும் நடந்திருக்க முடியாது.

மேலும் பெட்ரோல் அதிக அளவில் அரேபிய நாடுகளில் கிடைத்தாலும் உலகமெங்கும் உள்ள எல்லா தேசங்களிலும் சுமார் 7,50,000 எண்ணெய்க் கிணறுகளில் இன்றைக்கு பெட்ரோல் கிடைக்கத்தான் செய்கிறது. அப்படி என்றால் உலகம் முழுவதும் மிருகங்கள் ஒரே நேரத்தில் மண்ணில் புதைந்து பாறைப் படிவங்களாக மாறியிருக்க வேண்டும். இதற்கான சாத்தியம் நோவா காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தைத் தவிர வேறு சூழ்நிலையில் இல்லை என்று விஞ்ஞான உலகம் நம்புகிறது.

நிலக்கரி உலகமெங்கும் எப்படிக் கிடைக்கிறது ?

இன்றைக்கு உலகமெங்கும் உள்ள நிலக்கரியின் மொத்த அளவு ஏழு மில்லியன் டன்தான் இருக்கும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. உலகில் மீண்டுமாய் நிலக்கரி உருவாகவில்லை. ஒருமுறை உருவான நிலக்கரியைத்தான் நாம் இப்போ வெட்டி எடுத்துக்கிட்டு இருக்கிறோம். அப்படி என்றால் முதன் முதலில் நிலக்கரி எப்போ உருவானது? அது எப்படி உருவானது? என்று பார்க்கும்போது ஒரு காலத்தில் கோடிக்கணக்கான மரங்கள் பூமிக்குள் ஒரே சமயத்தில் புதையுண்டு போயிருக்கணும். புதையுண்ட மரங்கள் எல்லாம் பூமியின் ஆழத்தில் உள்ள வெப்பத்தினால் அவைகள் நிலக்கரியாக மாறுகிறது. இப்படித்தான் நிலக்கரி உருவாகிறது.

இந்த பூமியில் நிலக்கரி உருவாகி பல மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றே விஞ்ஞானிகள் இதுநாள் வரை கருதி வந்தனர். ஆனால் இப்பொழுது நடைபெற்ற ஆராய்ச்சியில் நிலக்கரி உருவாகி சில ஆயிரம் ஆண்டுகளே ஆகியிருக்க வேண்டும் என்பதை விஞ்ஞான உலகம் ஏற்றுக் கொள்கிறது.

நிலக்கரியானது சுரங்கங்களில் பல்வேறு மட்டங்களில் கிடைக்கின்றது. ஒரு மட்டத்திலிருக்கும் நிலக்கரிக்கும் இன்னொரு மட்டத்திலிருக்கும் நிலக்கரிக்கும் இடையிலே பல கோடிக்கணக்கான வருஷங்கள் கடந்து இருக்கும் என்றே இதுவரை கருதப்பட்டது. சில நிலக்கரி சுரங்கங்களில் மரங்கள் நின்ற நிலையிலேயே நிலக்கரியாக மாறியுள்ளது. இப்படி நின்ற நிலமையில் நிலக்கரியான மரங்கள் பல மட்டங்களைக் கடந்து செல்கின்றவனவாக இருக்கிறது. இம்மட்டங்களுக்கு இடையே பல மில்லியன் வருஷங்கள் கடந்திருக்குமென்றால் இந்த மரங்களும் பல மில்லியன் வருஷங்கள் வளர்ந்திருக்கணும். மரங்கள் மில்லியன் வருஷங்கள் வளர்வது இல்லை. இதனால் நிலக்கரியானது உலகில் பல்வேறு மட்டங்களில் கிடைத்தாலும் அவையெல்லாம் ஒரே சமயத்தில்தான் உருவாகி இருக்கிறது என்பது தெளிவாகிறது.

இந்த உலகத்தில் மனிதன் உருவாவதற்கு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னாடியே நிலக்கரி உருவாகி இருக்கணும் என்று டார்வின் சொல்லிவந்தார். இதை தவறு என்று இன்றைய ஆராய்ச்சிகள் அடையாளம் காட்டியிருக்கிறது. 1885ல் ஆஸ்திரியா விலுள்ள Wockka Buck என்ற இடத்தில் நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் போது அதில் மனிதனால் செய்யப்பட்ட ஒரு இரும்பு ஆயுதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதுபோல இன்னொரு முறை நிலக்கரி வெட்டி எடுக்கும்போது அதிலே மனிதனால் செய்யப்பட்ட தங்க செயின் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே மனிதன் வாழ்ந்த காலத்திற்குப் பிறகுதான் நிலக்கரி இருக்கணும் என்கிற உண்மை உலகிற்கு விளங்கியது. மேலும் வெப்பப் பிரதேசங்களில் மட்டும்தான் நிலக்கரி கிடைக்கிறது என்று முதலில் ஆராய்ச்சியாளர்கள் நம்பி வந்தனர். ஆனா இப்போதோ நிலக்கரி பனி படர்ந்த பனிப் பிரதேசங்களிலேயும் நிறைய எடுக்கப்படுகிறது.

நோவா காலத்து வெள்ளம் உலகில் எங்கேயோ ஒரு பகுதியில்தான் நடந்திருக்க வேண்டும் என்றால் உலகில் ஒரே இடத்தில் மட்டும்தான்

நிலக்கரி கிடைக்கணும். ஆனால் நிலக்கரி இந்த உலகத்தின் எல்லாத் தேசங்களிலேயும் கிடைக்கிறது. அப்படி என்றால் உலகமெங்கும் ஒரே சமயத்தில் கோடிக்கணக்கான மரங்கள் பூமியில் புதையுண்டு போயிருக்கணும். அப்படிப்பட்ட ஒரு சாத்தியம் இந்த உலகத்தில் நடந்தது என்றால் அதற்கு நோவாவின் காலத்து வெள்ளமே காரணமாகும்.

நோவா காலத்தில் வந்த வெள்ளத்தில் மரங்கள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டு எங்கெங்கு மண்ணில் புதைந்ததோ அந்தப் பகுதிகளில் இருந்துதான் நிலக்கரி எடுக்கப்படுகிறது. இந்த உலகில் எந்த ஒரு பொருளை எடுத்தாலும் அதைப் பற்றி திருமறை என்ன சொல்லுகிறதோ அப்படியே அது இருக்கிறது. 'பூமியின் மேல் ஆகாரம் விளையும். அதன் கீழிடங்களில் இருக்கிறவைகளோ அக்கினியால் மாறினது போலிருக்கும்' - யோபு 28 : 5.

மேலும் கீழ்கண்ட விஞ்ஞானபூர்வமான பல விஷயங்களை எனது அரிய வேதம் அறிய வேண்டிய வேதம் என்கிற நூலில் எழுதியிருக்கிறேன். அதையும் படித்துப் பாருங்கள்.

1. வேற்றுக் கிரகவாசிகள் (ஏலியன்கள்) பூமிக்கு வந்தால், என்ன செய்வது என்கிற அமெரிக்க விஞ்ஞானிகளின் அறிக்கை குறித்தும்,
2. அமெரிக்க விஞ்ஞானிகள் பயப்படுவதைப் போல நடக்கும் என பரிசுத்த வேதாகமத்தில் யோவேல் புத்தகத்தில் 2 : 2 - 12வரை கூறப்பட்டு இருக்கிறது.
3. இசைபாடும் விண்மீன்களைக் குறித்து விவிலியம் கூறும் உண்மை என்ன?
4. உலகின் மையம் இஸ்ரவேல் தேசம் என்பதற்கு ஆதாரம் பைபிளில் இருக்கிறது.
5. உலகம் படைக்கப்பட்ட நாட்களிலிருந்து ஒரே ஒரு நாள் மட்டும் அதிக நேரம் மறையாமல் இருந்தது. அதற்குரிய காரணத்தையும் திருமறையே கூறுகிறது.
6. காற்றுக்கும் நிறையுண்டு, ஜலத்திற்கும் அளவுண்டு என கூறுவதற்குரிய ஆதாரம் வேதத்தில் உள்ளது.

7. உலகம் முழுவதும் அணுக்களால் நிரப்பப்பட்டு இருக்கிறது என்கிற இன்றைய விஞ்ஞான கண்டுபிடிப்பை வேதம் அன்றே கூறிவிட்டது.

8. பிணி தீர்க்கும் சாக்கடலைப் பற்றிய தகவல்கள் திருமறையில் காணலாம்.

9. பூமியில் பருவ காலங்கள் மாறி மாறி வருவதற்குரிய என்ன காரணங்கள்?

10. தேவனுடைய படைப்புகளின் மகிமை, வல்லமை பற்றிய அதிசய தகவல்களை சத்தியவேதத்தில் காண முடியும்.

11. விசித்திரமான உயிரினங்கள் பற்றிய தகவல்களை திருமறை தருகிறது.

12. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய தகவல் திருமறையில் உள்ளது.

13. மயக்க மருந்து கண்டுபிடிக்க ஆதாரம் விவிலியமே என்று இன்று மருத்துவ உலகம் ஒத்துக் கொள்கிறது.

14. குளிர் பதனப் பெட்டி தயாரிக்க மூலம் திருமறையில் இருக்கிறது.

15. இன்றைய பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்கு பயன்படுத்தும் குழாய்த் தூண்கள் (Tuber Tresses)க்கு அடிப்படை வேதத்தில் இருக்கிறது.

16. ஏர் கண்டிஷன் வீடு, அறைகளுக்கு ஆதாரம் நியாயதிபதிகள் 3:20லும், ஏரேமியா 36:22லும் காணலாம்.

17. காவல் துறையில் துப்பறிய, மோப்பம் பிடிக்க நாய்களை பயன்படுத்துவதற்கு ஆதாரம் வேதத்தில் உள்ளது.

மேற்கண்ட ஒவ்வொரு விஷயங்களும் பரிசுத்த வேதாகமத்தில் இல்லாத விஷயம் என்று ஒன்றுமே இல்லை என நாம் அறிந்து கொள்ளவும், இன்றைய பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரம் விவிலியத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே கூறப்பட்டுள்ளது என சந்தேகமற நிரூபிக்கின்றன.

இந்த உலகம் அக்கினியினால் அழியும்

நோவாவின் காலத்திலே இந்த உலகம் தண்ணீரின் பெரு வெள்ளத்தினால் அழிந்ததை திருமறையின் ஆதாரத்துடன் சரித்திர

சான்றுகளோடு நாம் இதுவரை பார்த்தோம். அன்றைய உலகம் அழிக்கப்பட்டதற்கு காரணமே அன்றைய மக்களின் கட்டுக்கடங்காத பாவங்களே ஆகும். அதே நிலைதான் இப்போதும் இருக்கிறது. இந்த உலகத்தின் முடிவிலே இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் நோவாவின் காலத்தில் என்ன நடந்ததோ அதே போல இப்போதும் இந்த உலகில் ஏற்படும் என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. 'நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படி மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்'. - மத் 24 : 37. நோவாவின் காலத்து அழிவுக்கு காரணம் பாவம் பெருகி இருந்தது. துன்மார்க்கம் தலைவிரித்து ஆடியது. அன்றைய மக்கள் கடவுளின் வார்த்தைக்கு கீழ்படியாமல் போனார்கள். அதனால் இறைவனின் கோபத்திற்கு ஆளாகி வெள்ளத்தினால் அழிந்து போனார்கள். இதே போலத்தான் இன்றைய நிலையும் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் பாவம், அக்கிரமம், விபச்சாரம், வேசித்தனம், கொலை, கொள்ளை, களியாட்டம், வெறி, தீவிரவாதம், வன்முறை, லஞ்ச லாவண்யம் என எங்கும் அநியாயம் பெருகி இருக்கிறது.

ஜனங்கள் தெய்வ பயமின்றி, மனம் போனபடி வாழ்கின்றனர். கடவுளின் வார்த்தைக்கு கீழ்படிய மறுக்கின்றனர். இறைவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருக்கிறாரே. அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லையே. தேவ கோபத்தினால் இந்த உலகம் இன்று பெரும் அழிவை நோக்கிப்போய் கொண்டு இருக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம். நோவாவின் காலத்தில் இந்த உலகம் ஜலப்பிரளயத்தில் அழிந்தது. இப்போதோ அது நெருப்பால், அக்கினியால் அழியும். அதற்கு ஆண்டவர் கொடுத்த அடையாளம் என்னவென்று பாருங்கள். 'லோத்துவினுடைய நாட்களில் நடந்ததுபோல நடக்கும். ஜனங்கள் உண்டார்கள். குடித்தார்கள். வாங்கினார்கள். விற்றார்கள். நட்டார்கள். கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் போன போது வானத்திலிருந்து நெருப்பும், கந்தகமும் விழுந்து எல்லோரையும் அழித்ததுபோல மனுஷகுமாரன் வரும் நாளிலும் நடக்கும்' (லூக்கா 17 : 28 - 30).

நோவாவின் நாட்களில் நடந்த சம்பவங்களை சரித்திர ஆதாரத்துடன் நாம் பார்ப்பது போல லோத்துவினுடைய நாட்களில் நடந்த சம்பவங்களையும் சரித்திர ஆதாரத்துடன் காண முடிகிறது. புதைபொருள்

ஆராய்ச்சியாளர்கள் சோதோம் கொமோரா பட்டிணம் இருந்த அந்தப் பகுதியை ஆராய்ந்து பார்த்போது திருமுறையில் சொல்லப்பட்ட அந்த சம்பவங்களைக் கண்டு அதிசயித்துள்ளனர்.

நல்ல நிலையில் இருந்த ஒரு சமுதாயம் திடீரென்று அழிந்து போய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நகரங்கள் இருந்த பகுதியில் இரண்டு எண்ணைக் கிணறுகள் முழுவதுமாக எரிந்து போயிருந்த நிலையில் கண்டுபிடித்துள்ளனர். பிளேவியல் ஜோசிபஸ் என்கிற சரித்திர ஆராய்ச்சியாளர் சோதோம் கொமோரா பட்டிணத்தின் அழிவைக் குறித்து தம்முடைய குறிப்புககளில் எழுதி வைத்திருக்கிறார். லோத்துவின் மனைவி உப்புத்தூண் ஆனது பற்றியும், அந்த உப்புத்தூணை தாம் பார்த்ததாகவும் இவர் குறிப்பிட்டுள்ளார். இன்றளவும் அந்த உப்புத்தூண் இருக்கிறது.

அழிந்த சோதோம் கொமோரா இருந்த பகுதியில் இருந்துதான் வெடி மருந்துக்குத் தேவையான கந்தகம் இன்றைக்கும் சேகரிக்கப்படுகிறது. லோத்தின் நாட்களில் நடந்த சம்பவங்களை நாம் ஆதாரத்துடன் இன்றைக்கு காண முடிகிறது என்றால் இயேசு கிறிஸ்து வரும் போதும் அப்படியே நடக்கும் என்று வேதம் கூறுகிறதே. வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையும் அப்படியே அட்சரம் பிசகாமல் வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியிருக்கிறது என்பதை 'நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்' என்று இரண்டு பாகமாக ஆதாரத்துடன் எழுதியிருக்கிறேன். ஆண்டவருடைய வார்த்தை ஒரு போதும் விருதாவாகப் போகாது. அப்படி இருக்கையில் நாம் ஆண்டவர் நம்மை இப்போது எச்சரிக்கும்போது எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என எண்ணிப் பாருங்கள்.

என்ன எச்சரித்தும் ஜனங்கள் மனந்திரும்பவில்லை. அவர்களின் அக்கிரம சிந்தனைகள், பாவச் செயல்களிலிருந்து விலகவில்லை என்பதை தேவன் அறிந்தாலும், அவர் இன்னும் நீடிய பொறுமையோடும், சாந்தத்தோடும் இருக்கிறார். அப்படி அவர் இருப்பதினால் அவர் எதையும் கண்டுகொள்ளவில்லை. நீ எக்கேடு கெட்டுப் வேணாலும் போ என்று அவர் விட்டுவிடவில்லை. மாறாக மனந்திரும்ப இன்னும் கொஞ்சம் கால அவகாசம் தருகிறார்.

'தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கடவுள் தமது வாக்குத்தத்தைக் குறித்து தாமதமாய் இராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனந் திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமை யுள்ளவராய் இருக்கிறார்' என 2 பேதுரு 3 : 9 கூறுகிறது. உலக முடிவிலே மக்கள் இருக்கும் நிலமையையும், கடவுளின் பொறுமைக்குரிய காரணத்தையும், முடிவிலே உலகம் நெருப்பால் அழியும் நிலையையும் 2 பேதுரு 3 : 3 - 10 வசனங்கள் திட்டமாய்க் கூறுகின்றன. 'ஆண்டவருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம். மலைகள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்' என 2 பேதுரு 3 : 10 தெளிவாய்க் கூறுகிறது.

இன்றைக்கு உலக நாடுகள் அனைத்தும் ஆயிரக்கணக்கான அணுகுண்டுகளை தயாரித்து வைத்துள்ளனர். இந்த அணுகுண்டுகளை பயன்படுத்த ஆரம்பித்தால் சுமார் அரை மணி நேரத்திற்குள் இந்த உலகமே எரிந்து சாம்பலாகிவிடும். உலகத்தில் எந்த உயிரினமும் இருக்காது. இந்த பூமி அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு இருக்கிறது என்பதை நாசா விஞ்ஞானிகள் கூறும் தகவல்களும் உறுதிப் படுத்துகின்றன. வெளி 8 : 7 - 10ல் 'இரத்தம் கலந்த கல் மழையும், அக்கினியும் உண்டாகி பூமியிலே கொட்டப்படும்' என்று சொல்லப்பட்டுள்ளதற்கு ஏற்ப எட்டி என்கிற ஒரு பெரிய எரிநட்சத்திரம் தீவட்டியைப் போல எரிந்து பூமியின் மீது விழும். அப்போது அக்கினி மழையைப் போல பொழியும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர் என்று மாலை மலர் 10.6.2009ல் செய்தி வெளியிட்டுள்ளது. செப்பனியா 3 : 8ல் 'பூமி எல்லாம் என் எரிச்சலின் அக்கினியால் எரியும்' என்று ஆண்டவர் சொன்னது நிறைவேறும்படியாக சூரியனிலிருந்து காந்தப் புயல் வெளிவந்து கொண்டிருக்கிறது என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள் என இந்து நாளிதழ் 25.1.2002 அன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதே செய்தியை தினத்தந்தி, தினமணி, தினமலர் நாளிதழ்களும் 25.1.12 அன்று வெளியிட்டன.

நமது பூமியின் மேல் சூரியனுடைய சூரியக் கதிர்கள் நம்மை நேரடியாக தாக்காதவாறு இதுவரை நம்மையும் இந்த பூமியையும் காத்து வந்த Ozone

என்கிற திரை இன்று கிழிந்து சூரியனின் Ultra Violet Rays நேரடியாக பூமியில் விழத்தொடங்கியுள்ளன. அது மாத்திரமல்ல. நோவாவின் காலத்தில் நமது பூமியைச் சுற்றியிருந்த ஜலத்திரை (Water Canopy) உடைந்ததால் ஜலப்பிரளயம் ஏற்பட்டது என்று முன்பு பார்த்தோம். அந்த ஜலத்திரை பூமியைச் சுற்றி இருந்த வரை சூரியனிலிருந்து வெளிப்படும் தீங்கிழைக்கும் X-rays, UV ray எல்லாம் இப்போது மனிதர்கள் மேலும், பூமியின் மேலும் நேரடியாக விழுவதால் புற்றுநோயும், தோல் சம்பந்தப்பட்ட பல நோய்களும் வரும் என்றும் பார்த்தோம்.

நோவாவின் காலத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்திலிருந்து மனந்திருந்தும் மக்களைக் காப்பாற்ற ஆண்டவர் அன்று ஒரு பேழையை தயார் செய்தார். அதுபோல இப்போதிருக்கும் இந்த உலகச் சூழ்நிலையிலிருந்தும் பாவத்தின் அழிவிலிருந்தும் நாம் மனந்திருந்தி தப்பித்துக் கொள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்கிற ஒரு பேழையை நமக்காக ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறார். 'இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் நம்மை சுத்தீகரிக்கும்' - 1 யோ 1 : 7 என்று கூறுகிறது. நித்திய அழிவிலிருந்து இயேசுவின் இரத்தம் நம்மை தப்பிக்க வைக்கும். 'நாம் கிறிஸ்துவுக்குள் நுழையும்போது புது சிருஷ்டியாக மாறுகிறோம்' 11 கொரி 5 : 17. இந்த உலகம் முழுவதும் உள்ள அனைத்து மக்களும் மீட்பைப் பெறுவதற்காகவே, நித்திய பேரின்ப வாழ்வில் பங்கேற்பதற்காகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனும் பேழையின் வாசல் நமக்காக திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. உலக அழிவிலிருந்து நாம் நம்மை பாதுகாத்து நம்மை தப்பிக்க வைக்க கிறிஸ்து என்னும் பேழயை ஆண்டவர் நமக்காக ஏற்பாடு செய்து இருக்கிறார். அதில் நாம் அடைக்கலம் புகுவோம். மற்றவர்களுக்கும் இந்த உண்மையை அறிவிப்போம். 'அவராலே அன்றி வேறு ஒருவராலும் நமக்கு மீட்பு இல்லை. நாம் மீட்பு பெறும்படி வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக் குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் (இயேசு கிறிஸ்து) வேறு ஒரு நாமம் கொடுக்கப்படவில்லை' என திட்டவட்டமாக அப் 4 : 12 கூறுகிறது. இந்த மாபெரும் உண்மையை நாம் உணர்ந்தவர்களாய் மட்டுமல்ல, மற்றவர்களுக்கு உணர்த்து கிறவர்களாயும் இருப்போம்.

இந்திய வேதங்களான பிரம்ம சூத்திரம், தாண்டீய மஹா பிரமாணம், பிருகதாரண்யஹ உபநிஷத்து, சாந்தோக்கிய உபநிஷத்து, ரிக் வேதத்தின் இரண்டாம் பகுதியாக புருஷ சூக்தம், சம்பூர்ண மஹாபாரதம், தேவாரம், திருவாசகம், நாலாயிரம் திவ்யபிரபந்தம், போற்றிப் பஃறொடை, அப்பர் தேவாரம், மெய்கண்டார் எழுதிய சிவஞான போதம் எல்லாமே மனிதர்களின் பாவம் போக்கப்பட இறைவனே பலியாகி இரத்தம் சிந்தவேண்டும் எனக் கூறுகிறது. ஆழ்வார்கள், நாயன்மார்கள், பக்த சிரோன்மணிகள், சித்தர்கள் அனைவருமே நமக்காக பலியாகி, இரத்தம் சிந்திய இயேசு கிறிஸ்துவாலேயே நமக்கு மீட்பு உண்டு, முக்தி உண்டு, மோட்சத்தை அவர் மூலமாக, அவர் வழியாக மாத்திரமே அடைய முடியும் எனத் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கின்றனர்.

இது மத மாற்றமல்ல, மன மாற்றம். பாவ வாழ்க்கையிலிருந்து மனமாற்றம். நம் வாழ்வில் இருக்கும் சகலவிதமான துன்பம், துயரத்திற்கு காரணமே நாம் செய்த பாவங்கள் தான். இதுவரை நான் எந்த ஒரு பாவமுமே செய்ததில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? அப்படி யாராவது சொன்னால் அவர்கள் தன்னைத்தானே வஞ்சித்துக் கொள்கிறார்கள் என்றே அர்த்தம் என திருமறை கூறுகிறது. நாமும் நமது பிள்ளைகளும் நன்றாக இருக்கவும், இந்த குறுகிய பூலோக வாழ்விற்குப் பிறகு இருக்கிற மறுமை வாழ்விலும் இறைவனோடு என்றென்றைக்கும் நாம் சொர்க்கத்தில் இருக்கவும் நம்மையெல்லாம் படைத்து, காத்து, போஷித்து வருகின்ற அந்த சர்வ வல்ல சர்வேஷ்வரராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிப்பிடித்துக் கொள்வோமா?

இன்றைய விஞ்ஞானத்தின் பல கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரம் ஆண்டவர் கொடுத்த பரிசுத்த வேதாகமமே என்று இதுவரை பார்த்தோம். விஞ்ஞானத்தை மாத்திரமல்ல, மெய்ஞானத்தையும், நாம் நீதியோடு, நேர்மையோடு, உண்மையோடு, உத்தமத்தோடு, பரிசுத்த இருதயத்தோடு கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாக வாழவும், நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றவர்களாக இருக்க நடக்க வேண்டிய வழியையும்

போதிக்கின்ற ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம் மாத்திரமே. பரிசுத்த வேதாகமம் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு வேதம் அல்ல. அது இந்த உலகத்தில் உள்ள அனைவருமே அனுதினமும் வாசித்து, தியானித்து, வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறியை போதிக்கிறது. அனைத்திற்கும், சர்வத்திற்கும் அதிகாரி இயேசு ஒருவரே. அவரையும், பரிசுத்த ஆவியானவர் கொடுத்த சத்திய வேதத்தையும் மட்டும் நாம் பற்றிப் பிடித்துக் கொண்டால் நாம் இப்பூமியில் வாழும் போதும் நமக்கு நிம்மதி, சந்தோஷம், சமாதானம். இந்த வாழ்க்கைக்கு பிறகு இருக்கிற மறுமையிலும் ஆண்டவருடன் நித்ய வாழ்வு கிட்டும். நாம் எல்லோரும் படித்தவர்கள். சகலத்தையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்வோமா? கர்த்தரின் கிருபை உங்களோடு என்றென்றும் இருப்பதாக.

நீங்கள் மோட்ச பிரஜைகளாக மாற
வாஞ்சிக்கும் உங்கள் அன்பு சகோதரர்
எஸ். தாயப்பன்



ஆசிரியர் குறித்து...

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 70 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும், பின்னர் ஃபென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன்முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப் படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர, பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம், மற்றும் இவரின் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும், 2000க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும், மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777